ராஜா ஜயசிங்கு

(ஒரு வீரச்சுவை நாடகம்)

ச. சாமிநாதன்,
கல்லூரி இடைநிலை 2ம் வகுப்பு,
பச்சையப்பன் கல்லூரி,
சென்னை.

ஆக்கியோன்:
புலவன் C. S. முத்துசாமி ஐயன்

புத்தக நிலையம்
இராயவரம்:
புதுககோட்டை ஸ்டேட்

முகவுரை

'செஞ்சி' என்பது, நதி, மலை, நாடு, நகர்வளங்களிற் சிறப்புற்று விளங்கிய ஒரு பழம்பதி. இதைப் பண்டைக்காலத்திற் சேர சோழ பல்லவர் முறையே ஆண்டு வந்தனர். பின்னர் இந் நகரை யாதவகுல மன்னனாகிய கிருஷ்ணக்கோன் என்பவன் ஆண்டனன். அவன் தெய்வபக்தியுள்ளவன். அவன் கமலக் கண்ணி யென்னும் பெயரிய மலைத் தெய்வத்தின் பேரருளால், புவியிற் பொதிந்து கிடந்த பொற்குவியலைப் பெற்று, செஞ்சிமா நகரை மாடமாளிகை, கூடகோபுரம், கோட்டை கொத்தளங்களுடன் சிறப்புற்றோங்கச் செய்தனன். இந்நகரைப் பாலாறு, சேயாறு, பெண்ணை, சங்கராபரணி என்னும் நதிகள் வளம்படுத்துவதால், இது நீர்வளமும் நிலவளமும் உடையதென்று சொல்வது மிகையாகாது.

இப் பட்டணத்தினிடையில் கோலகிரி, கிருஷ்ணகிரி, இராசகிரி, இரத்தினகிரி என்னும் நான்கு குன்றுகளிருக்கின்றன. கிருஷ்ணக்கோனுக்குப் பிறகு, அக்பர்காலத்தில் இந்நகர் சூரசிங்கு என்ற ராஜபுத்திரவீரன் ஆளுகைக்குட்பட்டிருந்தது. அவன் மகன் சுரப் சிங்கு என்னும் தரணி சிங்கு மன்னன். அவன் நற்குண நற்செயல்கள் வாய்ந்தவன். அவன் காலத்தில் ஔரங்கசீபின் புதல்வனை ஷாஆலம் என்பவன், டில்லியில் சக்கரவர்த்தியாய் அரசு புரிந்து வந்தான். அவன் ஒரு சமயம் தனது ஆட்சிக்குட்பட்ட சிற்றரசர்களுக்குக் கடிதம் அனுப்பி, அனைவரையும் தருவித்து, ஒரு விருந்து நடத்தி, முடிவில் தன்னிடத்தில் ஒரு குதிரை இருக்கிறதென்றும், அக்குதிரையை ஏறி நடத்துகின்றவருக்குப் பதினாறு பாரம் பொன் பரிசு அளிக்கப்படுமென்றும், அச்செயலில் தோல்வியுற்றவர் பதினாறுண்டு சிறைவாசம் செய்யவேண்டுமென்றும் கூற, தரணி சிங்கு மன்னன் தான் அக்குதிரையை ஏறி நடத்துவதாகக் கூறி, முயன்று, முடிவில் தோல்வியுற்று, நிபந்தனைப்படி சிறைப்பட்டான்.

அப்பொழுது தரணி சிங்கு மன்னன் மனைவி இரமாபாய் என்பவள் கருவுற்றிருந்தாள்; நல்ல முகூர்த்தத்தில் ஓர் ஆண் குழந்தையை யீன்றாள். அம்மகவே நமது கதாநாயகனாகிய ஜய சிங்கு. இவனுக்கு மகபதுகான் என்ற இணைபிரியாத் தோழன் ஒருவன் இருந்தனன். இவ்வரசிளங் குமரன் கலைகள் பயின்று, தனக்கு 15 ஆண்டு நிரம்பப் பெற்றவுடன், தன் தந்தையின் சிறை வாசத்தைத் தாய் சொல்லத் தெரிந்து, உடனே தன் தோழன் மகபதுகானுடன் டில்லிக்குச் சென்று, அங்கிருந்த துடுக்குக் குதிரையை யடக்கி, ஷாஆலம் சக்கரவர்த்தியால், பட்டமும் பரிசும் வழங்கப் பெற்று, அவன் சேனைத்தலைவனான பீமசிங்கு என்பவன் மகளான பதுமினியை மணந்து, தந்தையைச் சிறை மீட்டுச் செஞ்சி நகர் வந்து சேர்ந்தான்.

சிலகாலஞ் சென்றபின், தரணி சிங்கு மன்னன் நோய் வாய்ப்பட்டிறந்தான். ஜயசிங்கின் தாயும் உடன் கட்டை ஏறினள். பின்னர் ஜயசிங்கு சிங்காதனம் ஏறி, செஞ்சியில் செங்கோல் செலுத்தலானான். இவன் அரசு புரிந்தகாலம் இற்றைக்குச் சுமார்-230 வருடங்கட்கு முற்பட்டது என்பர்.

அப்போது ஷாஆலம் விண்ணுலகடைய, பருக்ஸியர் என்பான் டில்லிக்குச் சக்கரவர்த்தியானான். அவன் தன் நண்பன் சைதுல்லாகான் என்பவனைத் தனக்குப் பிரதிநிதியாயிருந்து ஆள ஆர்க்காட்டு நவாப்பாக நியமித்தனுப்பினான். அவன் ஜயசிங்கு மன்னன் புகழையறிந்து, பொறாமை கொண்டு, செஞ்சி அரசன் பகுதிப் பணம் செலுத்தவில்லை யென்னும் ஒரு பொய்முகாந்தரத்தை முன்னிட்டு, பலபாளயப்பட்டுகளைத் துணையாகச் சேர்த்துக்கொண்டு செஞ்சியின் மீது படை யெடுத்துச் சென்று போர் தொடங்க, ஜயசிங்கு மன்னனால் முறியடிக்கப்பட்டு, உயிர் தப்பி ஓடி ஒளித்துக் கொண்டான்.

அப்போரில் மகபதுகான் கொலை யுண்டான். அவன் கொலைக்குக் காரணமான எதிரியின் சேனைத்தலைவன் தாவுத்துக் கானை, ஜயசிங்கு வெட்டி வீழ்த்தினான். எதிரியின் வஞ்சனையால் தன் நண்பன் மகபதுகான் கொலையுண்டதை அறிந்த ஜயசிங்கு தானும் மண்ணுலக வாழ்வைத் துறந்து, பரமபதம் அடைந்தான்.

நாயகன் மரணத்தை யறிந்த இராணி பதுமினியும் உயிர் துறந்து உயர்பத முற்ருள். ஏனைய அரசகுலப் பெண்களும் போரில் உயிர் நீத்த தத்தம் நாயகர்களின் பிரிவாற்ருது, தீயில் குதித்திறந் தார்கள். பின்னர்ச் செஞ்சி நகர் சீர்குலேந்து, நவாபுவின் ஆட்சிக்குட்பட்டது.

ஜயசிங்கும், அவன் மனைவியும், நகர மாந்தருட் பலரும் இறந்ததற்கு வருந்திய ஆர்க்காட்டாரசனுல், அக்காலத்தில் இராணியின் ஞாபகார்த்தமாக இராணிப்பேட்டை என்று வழங்கும் ஒரூர் நிறுவப்பட்டது.

வீரச் சுவையும் பக்திச் சுவையும் நிறைந்த இந்நாடகம் இக் காலத்து மாணவர்க் கெல்லாம் நல்லதொரு விருந்தாகலாம். இச் செயலில் என்னை ஈடுபடச் செய்த என் நண்பர் பலர்க்கும் வெளியிட முன் வந்த பதிப்பாளர்க்கும் என் மனமார்ந்த நன்றி உரியதாகுக.

C. S. முத்துசாமி ஐயர்

[இந் நாடகம் ஷேக்ஸ்பியர் நாடகம்போல ஐந்து அங்கங்களையும், ஒவ்வோர் அங்கத்திலும் அதன் உட்பிரிவுகளாகிய பல களங்களையும் கொண்டது. ஒவ்வொரு களத்திலும் அமைந்த விஷயத்தைச் சுருக்கி வசனத்தில் முன்னர்த் தொகுப்பது நலமெனக் கருதிப் பின்வரும் களவிஷய சூசிகை தரப்பட்டிருக்கிறது :]

கதைச் சுருக்கம்

அங்கம் - I

களம் - 1

டில்லிச் சக்கரவர்த்தியாகிய ஷா ஆலம், 'நமது ஆட்சிக்குட்பட்ட சிற்றரசர்களில், நம்பாலுள்ள சிறப்புவாய்ந்த குதிரையை அடக்கியாளத் திறமைவாய்ந்த அரசர் எவரேனும் உளரோ?' என்று தன் மந்திரியைக் கேட்டான். அப்பொழுது அவன் மந்திரி சலாபத்துக்கான், 'செஞ்சியென்னும் நகரை ஆளும் தரணிசிங்கு மன்னன் எல்லாவிதத்திலும் ஏற்றமுடையவன் என்று கூறினன். ஷா ஆலம் 'தரணி சிங்கு நாட்டுவளம், நகரவளம், ஆற்றல் முதலியவற்றை விவரித்துக் கூறுக!' என்று கேட்டான். மந்திரி சலாபத்துக்கான் - செஞ்சிநகரச் சிறப்பு, தரணி சிங்கின் செங்கோற்சிறப்பு முதலியவற்றை விரித்துக் கூறினன். அத்தகைய அரசற்கும், ஏனைய மன்னவர்களுக்கும் கடிதம் எழுதி அவர்களை டில்லிக்குத் தருவிக்கும்படி ஷா ஆலம் தன் மந்திரி சலாபத்துக்கானுக்குக் கட்டளை யிட்டனன். மந்திரி, சக்கரவர்த்தியின் ஆணைப்படி எல்லா அரசர்களுக்கும் கடிதம் எழுதி அனுப்பினன்.

களம் - 2

செஞ்சி நகரில் தரணி சிங்கு மன்னன் தன் மந்திரியாகிய பாஸ்கர சிங்கை நோக்கித் தன் குடிகளின் க்ஷேம லாபங்களை விசாரித்துக்கொண் டிருக்கையில், டில்லிச் சக்கரவர்த்தி எழுதியனுப்பிய கடிதத்துடன் தூதன் ஒருவன் செஞ்சியை அடைந்து,

அரசன் அநுமதி பெற்று, அவைக்களம் புகுந்து, கடிதத்தை நீட்டினன். அக்கடிதத்தை மந்திரி வாங்கி அரசன் முன் படித்தனன். அழைப்புக் கடிதத்தில் அடங்கிய சமாசாரந் தெரிந்த தரணி சிங்கு மன்னன், அரச காரியத்தைத் தான் வரும்வரையில், தனக்குப் பிரதிநிதியாய் இருந்து கவனித்து வருமாறு தன் மந்திரிக்குக் கட்டளையிட்டு, டில்லிக்குப் புறப்பட்டுச் சென்றான்.

களம் - 3

ஷாஆலம், வந்த அரசர்களை வரவேற்று, முகமன்கூறி, நீவிர் அனைவீரும் இங்கு நடைபெறும், விழா நலங்கண்டு சின்னாள் எனக்கு விருந்தினராய் இருக்கவேண்டும், என்று கேட்டுக் கொண்டான். அரசர் யாவரும், அரசர்க்கரசன் வேண்டுகோளுக்கிணங்கி, மகிழ்ச்சியுடன் அங்குத் தங்கியிருந்தனர்.

களம் - 4

ஷாஆலம் அரசர்களை நோக்கி, அரசர்களே, நம்மிடத்தில் பஞ்சகல்யாணி என்னும் சிறந்த குதிரை யொன்று உளது. அதை ஏறி நடத்தும் அரசர் பதினாறு பாரம் பொன் பரிசு பெறுவர். அதில் தோல்வியடைபவர் பதினாறு ஆண்டு சிறைவாசம் செய்யவேண்டும் என்று கூறினன். அரசருட் பலர் அதற்குப் பின் வாங்கி நிற்க, தரணி சிங்கு மன்னன் தான் ஏறி நடத்துவதாக ஒப்புக்கொண்டு, முயன்று கடைசியில் தோல்வியுற்றுச் சிறைக்களம் புகுந்தான்.

அங்கம் - II

களம் - 1

தரணிசிங்கு மன்னன் டில்லிக்குச் செல்லும்பொழுது அவன் பத்தினி இரமாபாய் கருவுற்றிருந்தாள். நல்ல நாளில் ஓர் ஆண் குழந்தையை யீன்றாள். அவனுக்கு ஜயசிங்கு என்று நாமம் சூட்டினார். அவன் எல்லாக் கலைகளையும் பயின்று இணையற்றவனாய் விளங்கினன். ஜயசிங்கு தன் இன்னுயிர்த் தோழனாகிய

மகபதுகானுடன் விளையாட்டயர்ந்து நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் விளங்கிவந்தான். புத்திரன் பிறந்த செய்தியை, டில்லியில் சிறைவாசம் செய்யும், தரணிசிங்கு மன்னனுக்கு அமைச்சர் திருமுகம் எழுதித் தெரிவித்தனர்.

களம் - 2

ஜயசிங்கு ஒரு நாள் தன் தாயைக்காண அவள் அந்தப்புரஞ் சென்றனன். அப்பொழுது அவள் தனித்திருந்து வருந்திக் கொண்டிருக்கிற நிலையை அறிந்து, காரண மென்னவென்று கேட்டான். தந்தை டில்லியில் சிறைப்பட்டிருத்தலைத் தாய் சொல்லத் தெரிந்து, தந்தையைச் சிறைமீட்டு வருவதாகத் தாயிடம் தெரிவித்து விட்டு ஜயசிங்கு தன் தோழன் மகபதுகானுடன் டில்லிக்குச் சென்றான்.

களம் - 3

ஜயசிங்கும், மகபதுகானும் குதிரையேறி டில்லிக்குச் சென்றார்கள். அந்நகரிலுள்ளார் அவ்விருவர் தோற்றத்தைக்கண்டு அதிசயமுற்றனர். ஜயசிங்கு சபாமண்டபம் சென்று சக்கரவர்த்திக்குச் சலாம் செய்து, தான் வந்த வரலாற்றினைத் தெரிவித்தான். ஷாஆலம் அரசிளங் குமரனை நோக்கி, “நீயோ, சிறுவன். இத்தொழிலில் ஈடுபடுதல் ஆகாது. எண்ணித்துணிக கருமம். உன் தந்தையைச் சிறையினின்று விடுவிக்கின்றேன். அழைத்துச் செல்க”! என்று கூறினன். ஜயசிங்கு, “அரச குலத்திற் பிறந்த எனக்கு இரந்து மீட்டல் அழகன்று; குதிரையை யடக்கித் தந்தையை மீட்டுச் செல்ல விடை யருள்க”! என்று கூறலும், ஷாஆலம், “அவ்வாறே ஆகுக!” என்று அநுமதித்தனன்.

களம் - 4

பஞ்சகல்யாணிக் குதிரையை அலங்கரித்துக் கொண்டுவந்து நிறுத்தலும், மகபதுகானைக் குதிரையின் கலினத்தைப் பிடித்துக் கொள்ளச் சொல்லிச் சிலரைப் பக்கத்திலிருக்கும்படி பணித்து

ஜயசிங்கு அதன் மேல் பாய்ந்து ஏறி, அதை அடக்கி நடத்திச் சக்கரவர்த்தி முன் கொண்டு வந்து நிறுத்தினன். ஷாஆலம் அரசிளங்குமரனை எடுத்து மார்போடணைத்துக்கொண்டு மகிழ்ச்சி யடைந்தான். அந்நகர்த் தானைத் தலைவன் பீமசிங்கு, ஜயசிங்கின் ஆற்றலையும், அவன் குதிரையை அடக்கிய செயலையும், தன் மனைவி இராதாபாயிடம் விவரித்துக் கூறினன். அம்மாதும், "அச் சிறுவனுக்குக் கடவுள் அருள் புரிவாராக!" என்று கூறினள்.

களம் - 5

தானைத் தலைவன் பீமசிங்கு, சக்கரவர்த்திக்குச் சலாம் செய்து வணங்கித் தன் மகள் பதுமினியை ஜயசிங்குக்கு மணம் முடிக்கக் கருதியிருப்பதை அறிவித்தனன். அதற்குச் சக்கரவர்த்தியும், தரணி சிங்கு மன்னவனும் இணங்கித் தன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்விக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டான். சேனைத் தலைவன் கருத்துக்குவந்து, ஷாஆலம் தரணி சிங்கு மன்னவனைக் கேட்க அவனும் உள்ளமுவந்து ஒப்பினன். பின்னர்ச் சக்கரவர்த்தி ஜயசிங்கு திருமணத்தைக் குறித்து, நகரை அலங்கரிக்கும்படியும், அரசர்களுக்குத் திருமுகம் அனுப்பும்படியும் மந்திரிக்குக் கட்டளையிட்டு, தரணி சிங்கு மன்னவனைச் செஞ்சிக்குச் சமாசாரம் தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டான். மணவினைக்கு வேண்டிய காரியங்கள் யாவும் நடைபெற்றன.

அங்கம் - III

களம் - 1

தரணி சிங்கு மன்னன் கடிதத்தைப் பார்த்து, அவன் மனைவி இரமாபாய், அமைச்சர் முதலியவர்க்குச் செஞ்சிமா நகரை யலங்கரிக்கும்படி கட்டளையிட்டனன். பின்னர் ஜயசிங்கின் திருமணம் காண்பான் யாவரும் டில்லிக்குச் சென்றனர். மற்றுமுள்ள அரசர் யாவரும் டில்லிக்கு வந்து சேர்ந்தனர்.

களம் - 2

திருமண வைபவத்துக்குப் பற்பல தேயமன்னரும் வந்தனர். டில்லி அளகாபுரி போல் அலங்கரிக்கப்பட்டது. வந்தவர்களுக்கு விருந்து நடைபெற்றது. மணமகளை அலங்கரித்து ஊர்வலம் நடத்தினர். பின்னர் மணமகனுக்கு மஞ்சன மாட்டி, அலங்கரித்துத் திருமணச் சடங்கு சிறப்பாக நடத்தப் பெற்றது. ஷாஆலம் ஜயசிங்குக்கு வயிரம் இழைத்த வாளொன்றும், பஞ்ச கல்யாணிப் பரியும், ஆடையாபரணங்களும் பரிசாக அளித்தனன். சேனைத் தலைவன் பீமசிங்கு, மகளுக்கும், மருமகனுக்கும் சீதனமாகப் பல கிராமங்களும், யானை குதிரை முதலியவைகளையும் அளித்தனன். ஏனைய மன்னர், மணமக்களுக்குப் பற்பல பரிசுகள் வழங்கினர். வந்த மன்னர், விடை பெற்றுச் சென்றனர். தரணி சிங்கு மன்னன், தன் மகன் ஜய சிங்குடன் சின்னாள் சக்கரவர்த்திக்கு விருந்தினனாய் இருந்தான்; பின்பு தனயன் ஜயசிங்குடன் நகருக்குச் செல்லச் சக்கரவர்த்தியிடம் விடை பெற்றுக் கொண்டனன். ஷாஆலம் மகபது கானுக்குத் தனது குதிரையையும், பல பரிசுகளையும் வழங்கி, யாவருக்கும் உவப்புடன் உத்தரவளித்தனன். யாவரும் சக்கரவர்த்தியிடம் பிரியா விடைபெற்றுச் செஞ்சி நகர் வந்து சேர்ந்தனர்.

களம் - 3

சிலநாள் சென்றபின் தரணிசிங்கு மன்னன் பிணிவாய்ப் பட்டுப் பரமபத முற்றனன். அவன் மனைவி இரமாபாய் கணவனுடன் உடன்கட்டையேறி உயர்பத முற்றாள். பின்னர், மந்திரி, நகரமாந்தர் முதலாயினார் வேண்டுகோளின்படி, ஜயசிங்கு சிங்காதனம் ஏறிச் செஞ்சி நகரை ஆண்டு வந்தனன்.

களம் - 4

ஜயசிங்கு தன் நண்பனாகிய மகபதுகானைச் சேனைத் தலைவனாக்கி, தானையைப் பெருக்கி, ஆதிமனுவென யாவரும் புகழும்படி

குடிகளைத் தன்னுயிர்போலப் பாதுகாத்து, மாதமும் மாரி பெய்யச் செங்கோல் புரிந்து வந்தான்.

அங்கம் - IV

களம் - 1

ஆர்க்காட்டு நவாபு, ஜயசிங்கு மன்னன் சிறப்பை யறிந்து, பொறாமை கொண்டு, பல பாளயப்பட்டுகளுக்கு ஆசை வார்த்தை கூறி, செஞ்சி மன்னன் அரசிறை செலுத்தவில்லை யென்ற முகாந்தரத்தை முன்னிட்டு, அவர்களைச் சேர்த்துக்கொண்டு செஞ்சி நகர்மேல் படையெடுக்கச் சித்தஞ் செய்தனன்.

களம் - 2

ஆர்க்காட்டரசனாகிய நவாபுவால் அனுப்பப்பட்ட தூதனான தோன்ற மல்லன், செஞ்சி நகருக்கு வந்து, ஜயசிங்கை வணங்கி, நெடு நாளாகச் செலுத்தப்படாத அரசிறைப் பாக்கியை அட்டி சொல்லாமல் உடனே செலுத்த வேண்டுமென்று தெரிவித்துவர நவாபு கட்டளையிட்டதாகக் கூறினான். ஜயசிங்கு, "நாங்கள் இதுவரை ஒருவருக்கும் வரி செலுத்தின வழக்கமில்லை. வேண்டுமானால் போர் முனையில் பெற்றுக் கொள்ளலாம்!" என்று மறுமொழி கூறி அனுப்பிவிட்டான்.

களம் - 3

இந்தச் சமாசாரத்தைத் தூதன் மூலமாக அறிந்த நவாபு, பாளயத்தார்களையும், படைகளையும் திரட்டிச் செஞ்சியின் மீது படையெடுத்து வந்தான். வரும் வழியிலுள்ள செஞ்சியைச் சேர்ந்த பல கிராமங்களை நவாபுவின் சேனாவீரர் கொள்ளையிட்டனர். கிராமவாசிகள், மனைவி மக்களை யிழந்து, செஞ்சி நகர் வந்து, ஜயசிங்கு மன்னனிடம் முறையிட, அரசன் அவர்களைச் சமாதானப் படுத்தினன்.

களம் - 4

ஜயசிங்கு வழுதாவூருக்குத் தனது மண விஷயமாய்ச் சென்றிருந்த சேனைத்தலைவன் மகபதுகானுக்குச் சமாசாரம் அனுப்பிவிட்டுத் துரிதமாகப் போருக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தான். மகபதுகான் மணம் முடியாமலே உடனே செஞ்சி நகர் வந்தனன். ஜயசிங்கு மன்னன் ஆலயஞ்சென்று குலதெய்வத்தை வணங்கி, விடை வேண்டினன். தெய்வம் சரியான உத்தரம் அளிக்கவில்லை. மன்னன் மனைவியிடம் தெரிவித்தபோதும் சகுனபேதம் ஏற்பட்டது. ஒன்றையும் பொருட்படுத்தாமல் அவனும் சேனைத்தலைவனும் போர்க்கோலம் பூண்டு, சேனைகளுடன் போர் முனைக்கு வந்துவிட்டனர்.

அங்கம் - V

களம் - 1

எதிரியின் தந்திரத்தால், நூதனமாகப் பெருக்கெடுத்து வரும் சங்கராபரணி ஆற்று வெள்ளத்தைத் தங்கள் குதிரைகளைக் கொண்டு கடந்து, மன்னவனும், மகபதுகானும் அக்கரையிலுள்ள போர்க்களத்தைச் சார்ந்தனர். மகபதுகான், மன்னனை வணங்கி, "இப்போரை எனக்களித்தல் வேண்டும், நானே வென்று வருவேன்," என்று கூறினன். ஜயசிங்கு, "நான் உடனிருப்பது, உனக்கு உற்சாகத்தை ஊட்டும்,' என்று கூறி அவனைத் தொடர்ந்து சென்றான்.

களம் - 2

மகபதுகான் செய்த போர்த்திறத்தால் நவாபு சேனையில் பாதிக்கு மேல் மாண்டு விட்டது. மகபதுகான் திருவண்ணாமலைப் பாளையப்பட்டுச் சுபாங்கன் கையை வெட்டி வீழ்த்தி, வெற்றியோடு திரும்புகையில், நவாபு சேனைத்தலைவன் தாவுதுகான் மறைவாயிருந்து மகபதுகானைச் சுட்டுவிட்டான். எதிரிகள் குதூகல மடைந்தார்கள்.

களம் - 3

மகபதுகான் எதிரியின் வஞ்சனையால் இறந்தான் என்பதை அறிந்த ஜயசிங்கு, கோபாவேசங் கொண்டு, எதிரியின் சேனைக் கடலிற் புகுந்து, சேனைத்தலைவன் தாவுதுகானைக்கொன்று, எதிரியின் சேனைகளைச் சின்ன பின்னஞ் செய்தனன். பகைவர் சேனை முறிபட்டன. ஜயசிங்கு நவாபுவைத்தேடித் திரிந்தான். நவாபு சமாதானத்தை விரும்பித்தோன்றமல்லனைத் தூதனுப்பினன். ஜயசிங்கு உடன்படவில்லை. உடனே போர் மூண்டது. நவாபு தன்னைப்போல ஒரு வீரனைத் தயார்செய்து போருக்கனுப்பிவிட்டு ஓடி ஒளித்துக்கொண்டான். ஜயசிங்கு, போலி வீரனை நவாபு என்று எண்ணி அவன் மேல் பாய்ந்து அவன் கையை வெட்டினன், அவன் உண்மையைக்கூறி வேண்டிக்கொள்ளவும் அவனை உயிருடன் விட்டுவிட்டான். ஜயசிங்கு தனித்திருந்து, "நண்பன் மகபதுகான் இறந்தனன். எதிரியோபுறங் காட்டி ஓடி ஒளித்துக்கொண்டான். போருக்கு வருவார் ஒருவரையுங் காணேம். நகருக்குத்திரும்பிச் செல்வதில் பயன் என்ன!" என்று நினைத்துத் தன்னுயிரைத்தானே மாய்த்துக்கொண்டான்.

களம் - 4

இச்செய்தி செஞ்சி நகரெங்கும் பரவியது. பதுமினி, நாயகன் பிரிவாற்றது தானும் உயிர் துறந்தனள். நகரிலுள்ள ஆடவர், பெண்டிர் அனைவரும் உயிர் நீத்தனர். செஞ்சி சீரழிந்தது.

களம் - 5

இந்த விஷயங்களைக் கேட்ட நவாபு, பச்சாத் தாபப்பட்டு, இறந்தவர்களை அடக்கம் செய்யும்படி கட்டளையிட்டு, இராணியின் பெயரால், இராணிப்பேட்டை என்னும் ஓர் ஊரை நிறுவிச் செஞ்சி நகரை ஆர்க்காட்டோடு சேர்த்து ஆண்டு வந்தான்.

சிலநாடக பாத்திரங்களின் குணநலங்கள்

1. ஜயசிங்கு: ஜயசிங்கு ஆற்றலில் ஆண் சிங்கம் போன்றவன்; தெய்வ பக்தியுள்ளவன்; சத்திய சீலன்; உண்மை நண்பன்; நண்பன் உயிர் துறந்ததை எண்ணித் தானும் உயிர் நீத்தவன்.

2. இராணி பதுமினி: இராணி பதுமினி உத்தம பத்தினி; கற்புக்கரசி; பொற்புக்கு அணிகலன்; கணவன் பிரிவால் மண்டோதரி எவ்வாறு உயிர் நீத்தனளோ, அவ்வாறே தன் நாயகன் பிரிவைக் கேட்ட மாத்திரத்தில் உயிரைவிட்டவள். இவள் பெயரால் இராணிப்பேட்டை யென்று, ஓர் ஊர் நிறுவப்பட்டு, இவள் புகழ் இன்றும் நிலவுலகில் நிலவுகின்றது.

3. தரணி சிங்கு: இம்மன்னன் மானத்தைப் பூணக மதித்து நெடுநாள் சிறைவாசஞ் செய்தவன்; நீதி நெறி தவறுமல் உலகாண்டவன்.

4. மகபதுகான்: மகபதுகான் விசுவாசமுடையவன். மதத்துவேஷமில்லாதவன்; ராஜா ஜயசிங்குடன் இளமை தொட்டுப் பழகி, அவனுக்கு உயிர்த் துணையாய் அமைந்திருந்தவன்; தனனலங்கருதாது, மன்னலத்தையே மதித்து வந்த மாட்சிமையாளன்; போரில்வல்லவன்; வீரர்சிகாமணி.

5. இரமாபாய்: இரமாபாய் கருப்பிணியாயிருக்கும்போது தன் நாயகன் சிறைப்பட நேர்ந்ததும், புத்திரனது நலத்தைக் கருதித் துயரத்தை வெளிப்படுத்தாமல் புத்திரனை ஈன்று வளர்த்தவள்; நாயகன் உயிர்துறந்தபொழுது அக்கால வழக்கப்படி உடன்கட்டையேறி, உயிர் நீத்த உத்தமி.

6. பீமசிங்கு: பீமசிங்கு டில்லிச் சக்கரவர்த்தியின் சேனைத் தலைவன்; ராஜவிசுவாசமுடையவன்; ஜயசிங்கின் ஆற்றலைக்கண்டு

அவனுக்குத் தன் மகள் பதுமினியை மணஞ்செய்து கொடுத்து, அவனைத் தன் மருகனாக்கிக் கொண்டவன்.

7. இராதாபாய்: இராதாபாய் பீமசிங்கின் மனைவி. இவளும் இவள் கணவனும், ஒத்த மனமுடையவர். இவள் தன் கணவன் சொல்லைத்தட்டாமல், ஜயசிங்குக்குத் தன் மகளை அளிக்கப் பூரண சம்மத முடையவள்.

8. ஷாஆலம்: ஷாஆலம் டில்லி அரசன்; அக்பர் சக்கரவர்த்தியைப்போல உத்தமக் குண முடையவன்; மதத்து வேஷமற்றவன்; ஜயசிங்கைத்தன் புத்திரனைப்போல மதித்து மகிழ்ந்தவன்.

நாடக பாத்திரங்கள்

கிருஷ்ணக் கோன், சூரசிங்கு, தரணிசிங்கு அல்லது சுரப்சிங்கு-செஞ்சி அரசர்கள்.

ஜயசிங்கு - கதாநாயகன்.

அனந்த கோயில் காவலன் - செஞ்சியை ஸ்தாபித்தவன்.

ஷாஜஹான், ஔரங்கஸீப், ஷா ஆலம் - டில்லியரசர்கள்.

பீமசிங்கு - டில்லிச் சேனாதிபதி.

மகமது கான் - ஜயசிங்கின் துணைவன் ; சேனைத்தலைவன்.

ஜகந்தர், சுல்பிர்கர்கான்,

பரக்ஸியர் - ஷா ஆலத்துக்குப் பின் வந்த அரசர்கள்.

சைதுல்லாகான் - ஆர்க்காட்டு நவாபு.

தொடர்மல்லன்-நவாபுவின் தூதன்

தாவுதுகான் - நவாபுவின் சேனைத் தலைவன்.

சுபாங்கன் - திருவண்ணாமலைப் பாளையப்பட்டுக்காரன்.

பாஸ்கர சிங்கு - செஞ்சியரசன் மந்திரி.

கொண்டல்ராய் - விதூஷகன்.

மதுரகவி - செஞ்சிப் புலவன்.

ஆசுகவி - சேரநாட்டுப் புலவன்.

இரமாபாய்-தரணிசிங்கின் மனைவி

இராதாபாய் - பீமசிங்கின் மனைவி.

பத்மினி - கதாநாயகி. ஜயசிங்கின் மனைவி.

இந்திரா. பூமா, சரஸாங்கி - பதுமினியின் பாங்கிகள். குடிகள் முதலியவர்கள்.

கதை நிகழ் இடம் : டில்லி, செஞ்சி, ஆர்க்காடு.

நதிகள் - பாலாறு, சேயாறு, பெண்ணை, சங்கராபரணி.

மலைகள் - கோலகிரி, கிருஷ்ணகிரி, ராஜகிரி, இரத்தினகிரி.

நாடு - தொண்டைநாடு.

நகர் - செஞ்சிமாநகரம்.

கமலக்கண்ணி - மலைத் தெய்வம்.

ராஜா ஜயசிங்கு

கடவுள் வணக்கம்

படைத்துக் காத்துப் பற்பல உயிர்களைத்
துடைத்து மீளவுந் தோன்றச் செய்திடுந்
தொன்முது கடவுளின் துணையடி
பன்முறை யேத்தியாம் பணிகுவ மனனே!

முதல் அங்கம்

முதற் களம்

இடம்: டில்லி தர்பார்

காலம்: காலை

பாத்திரங்கள்: ஷாஆலம், பீமசிங்கு, சலாபத்துக்கான், சைதுல்லாகான் முதலானவர்கள்.

ஷாஆலம்: (சலாபத்கானை நோக்கி)

[நேரிசை யாசிரியப்பா]

உலகெலாம் ஒளிசெய் பல்புகழ் ஞாயிறு
வலந்தரல் மானவென் வட்டவா ழியின்கண்
மாநிலம் வளர்தரக் கோன்முறை செய்யும்
ஆய்மதி யமைச்சர் ஐவகை யிலக்கணம்
வாய்ந்ததும், அட்ட மங்கலம் ஏய்ந்ததும்,
நெற்றியிற் கால்களில் நிறம்வெண் மையதும்
கற்றையங் கவரிபோல் கவினுறு வாலதும்,

பிணைமான் போலப் பிறங்கும் விழியதும்,
கணையின் வேகங் கடந்து செல்வதும்,
வாத கதிபோல் வானுறப் பாய்வதும்,
ஓதநீர் அலையென ஓங்கி வருவதும்,
ஓடையிற் குதிப்பதும், மேடையிற் பாய்வதும்.
கொட்புறக் கோல்கொடு குலாலன் முடுகும்
மட்கலத் திகிரிபோல் வளைந்து வருவதும்,
ஆகிய சிறப்பமை வேகவெம் பரிமாக்
காரொலி கடலொலி கலங்கக் கனைத்துத்
தாரொடு தண்டைச் சதங்கை யொலியுடன்
வயங்குநம் புரவி வன்மையை யடக்கிச்
செயங்கொள் மன்னவர் செகத்திடை யுளர்கொலோ?

சலாபத்கான்: (ஷாஆலத்தை நோக்கி)

தரணிசிங் கென்பவன் தரியலர் தம்மை
முரண்வலி யடக்கும் மொய்ம்பன் ஒருவன்
ஏற்றவன் ஆவான்.

ஷாஆலம்: (சலாபத்கானை நோக்கி)

இத்தகை யரசன்
ஆற்றலும் இவனகர் அமைதியும் வளமும்
சாற்றுக!

சலாபத்கான்:

தவளத் தனிக்குடை நிழலில்
எல்லையில் புகழுடன் டில்லியம் பதியில்
இருந்து செங்கோல் புரிந்திடு புரவல!
இந்நிலந் தன்னில் இஞ்சிசூழ் செஞ்சி
நன்னலந் திகழும் நாடொன் றுளது;

நிலமகள் நெற்றியில் நிலவிடு சிந்துரத்
திலகம் போலத் திகழ்தரு நாடு;
கன்னலுங் கமுகுங் கவின்பெற் ரோங்கிச்
செந்நெற் பயிர்கள் செழித்தொளிர் நாடு;
பாவருந் தமிழால் மூவரும் முகுந்தனை
மொழிவிளக் கேற்றித் தொழுதநன் னாடு;
பாவை பங்கனைப் பாடிய மூவருள்
இருவர் தோன்றிய எழில்பெரு நாடு;
பரிவுடன் ஔவை பாடலுக் குகந்து
முத்தெறி பெண்ணை முதுநீர் தவிர்த்துத்
தத்திய நெய்பால் தவழ்தரு நாடு;
வாழைக் குருத்து மதிநடுப் போயிருள்
வேழமேற் பொலிமத வேள்குடைக் காம்பாய்த்
துலங்கும் வளந்தரு தொண்டை நன்னாடு;
நலந்தரு மூர்த்தி தலந்திகழ் நாடு;
மண்டலம் விண்டலம் வளர்புகழ் கொண்ட
தொண்டர் புராணம் தொகுத்த சேக்கிழார்
ஆன்ற புகழுடன் அவனியில் அந்நாள்
தோன்றிய நாடு தொண்டைநா டாமால்.
வான்றோய் மதிலும், வாளைபா யகழியும்,
தேன்றேர் குறவர் தினைப்புனச் சேரியும்,
குறிஞ்சியும் முல்லையும் கொழித்திடு செல்வமும்,
மருதமும் நெய்தலும் வழங்குறு பொருளும்,
நிறைந்த நிதிசால் நிகரிலா வணமும்,
அறந்தலைக் கொண்ட அன்னசத் திரங்களும்,
பாவலர் கலைபயில் பட்டிமண் டபமும்,
தேவரா லயமும், சித்திரச் சாலையும்,
கோல கிரிபரந் தாமன் கோயிலும்,
சாலச் சிறந்த சக்கிலி துர்க்கமும்,

கொற்றவர் கூடுங் கொலுக்கூடங்களும்,
நற்றவர் வசிக்கும் நலந்திகழ் நகரம்.
தஞ்சமென் றோர்களைத் தாங்கும் நகரம்.
செஞ்சிமா நகர்வளம் செப்பிட வேண்டியே
தெருண்ட கலைதேர் சேடனு முன்னாள்
இரண்டா யிரநா வெய்தின னென்பரால்
மாநிலங் காக்கும் மன்னவன் மன்னுயிர்க்
கான பயங்க ளைந்தும் போக்கி
அரசு புரிவ தறத்தா றுமென
உரைத்த மேலோர் உரைவழி நின்று
பச்சைப் பசுங்கிளி பருந்துடன் கூட்டில்
இச்சை யுடனே யிணங்கி யிருக்கவும்,
கரியும் அரியும் கலந்துற வாடவும்,
வரிப்புலி மானுடன் வண்புனல் பருகவும்,
வந்தியர் மாகதர் வந்தித் தேத்தவும்,
சந்திர வட்டத் தனிக்குடைக் கீழிருந்
தொருகோ லோச்சும் உயர்குணத் தரசன்
தரணிசிங் கம்மெனத் தரணிகொண் டாடத்
தரணிசிங் குப்பேர் தரித்த புரவலன்
ஒருவன் உளனல்!

ஷாஆலம்: (சலாபத்கானை நோக்கி.)

உயர்மதி யமைச்ச?
இன்னே யவற்கும் ஏனைய
மன்னவர் தமக்கும் வரைக நிருபமே.

சலாபத்கான்: (அரசனை நோக்கி)

[நேரிசை யாசிரியப்பா]

அச்சா! அரசே! இச்சையின் படியே
புரசைக் களிறுடைப் புரவலர்
விரசிடத் திருமுகம் விடுப்பனிப் பொழுதே.

இரண்டாம் களம்

இடம்: செஞ்சி மாநகரம்

காலம்: காலை

பாத்திரங்கள்: தரணிசிங்கு, பாஸ்கரன், கொண்டல் ராய் முதலானவர்கள்.

தரணி சிங்கு: (அமைச்சனை நோக்கி)

[நேரிசை யாசிரியப்பா]

ஆட்சியில் அமைந்த அணிநகர் மாந்தர்
மாட்சிமை யாக வாழ்குநர் கொல்லோ?

அமைச்சன்:

அனைவரும் சுகமே அரசே!

காவலன்: (அரசனை நோக்கி)

இருவர்
புரவி வீரர் போந்தனர் வாயிலில்.

அரசன்:

வரவிடு வாயிவண் வந்தவர் தம்மை.

காவலன்: (வெளியிற் சென்று வீரரை நோக்கி)

வேந்தன் அழைத்தனன் விரைவிற் சென்மின்!

[வந்தவர்கள் உள்ளே புகுந்து மந்திரியிடம் கடிதத்தைக் கொடுக்கின்றனர்.]

அமைச்சன்: (அரசனை நோக்கி)

தரணிப ரேறே! தமக்கு டில்லி
அரசர் கடிதம் அனுப்பினர்

அரசன் :

நல்லது! அமைச்ச! ஒல்லையிற் படிக்கவே!

[அமைச்சன் கடிதத்தைப் படிக்கிறான்.]

[நேரிசை யாசிரியப்பா]

சந்திர குலத்தவ தரித்த பாண்டவர்
இந்திரப் பிரத்தமென் றியற்பெய ரிட்ட
அத்தின புரியாம் அளகா புரிநிகர்
எத்திசை யும்புகழ் எழிலுறு நகரம்,
பூமகள் முகமெனப் பொலிதரு நகரம்,
நாமகள் நடமிடும் நலந்திகழ் டில்லியில்
இருந்தர சியற்றும் இறைவன் திருமுகம்:
வாளை யுழக்க வராலினங் கமுகின்
பாளையில் குதிகொளும் பழனநன் னடு!
தண்டலை கொண்டலைத் தைவரு நாடு!
விண்டல மோங்கி வியன்கொடி யாடும்
இஞ்சிசூழ்ந் திலங்குஞ் செஞ்சிமா நகராள்
தன்னிக ரில்லாத் தரணி சிங்கு
மன்னவன் காண்க: மகிதலத் துள்ள
வாம்பரி பலவும் மகபதி புரவியாம்
உச்சைச் சிரவமும் ஒப்பிடற் கரியவோர்
நாடகப் பரிமா நம்பா லுளதால்.
கேடயத் தடக்கைக் கிளர்முடி வேந்தரை
அழைத்துப் பந்தயம் அமைப்பான் யாமும்
தழைத்த சிந்தையால் தனித்திரு முகங்கள்
வரைந்து விடுத்தனம் மணிமுடி வேந்தே!
விரைந்து விழாவின் விமரிசை காண

வருக! வருக ! மன்னவ!
திருவளர் உனது செங்கோல் வாழ்கவே!

அன்புள்ள
ஷா ஆலம்
டில்லியரசர்

தரணி சிங்கு : (அமைச்சனை நோக்கி)

[நேரிசை யாசிரியப்பா]

மன்னவன் திருமுகம் மதித்து டில்லிக்
கின்னே யேக வெண்ணினன் அமைச்ச!

அமைச்சன் : (அரசனை நோக்கி)

இறைவி கருப்பிணி யாயிருக் கையிலே
புறப்படல் உசிதமோ புரவல, கருதுக.

தரணிசிங்கு : (அமைச்சனை நோக்கி)

அரசர்க் கரசன் ஆணையைக் கடத்தல்
அரசர்க் கழகோ ? ஆதலின், அமைச்ச!
இந்நகர்க் காரியம் எவையும் என்போல்
நன்னலம் பெறவே நடத்துக நீயே ;
சென்று வருவேன் சீக்கிரம்
என்றும் கடவுள் இருப்பார் துணையே.

மூன்றும் களம்

இடம்: டில்லி
காலம்: காலை
பாத்திரங்கள்: ஷாஆலம், மந்திரி, அரசர்கள், கிருஷ்ணன், இராமன்

[சக்கரவர்த்தி ஆணைப்படி, அரசர் அனைவரும் டில்லி நகர் வந்து சேர்ந்தனர். ஷாஆலம் அவர்களை வரவேற்று முகமன் கூறுகிறான்.]

ஷாஆலம்: (அரசர்களை நோக்கி)

[நேரிசை யாசிரியப்பா]

வேலைசூழ் ஞாலம் வியன்மதிக் குடைக்கீழ்ச்
சீலமோ டிருந்து செங்கோல் செலுத்தும்
அரசரே! நீவிரென் அழைப்புக் கிணங்கி
விரைவுடன் வந்தீர், வியந்தனன்; நீவிர்
விருந்தின ராயிவ் விழாநலம் பெரிதும்
கண்டு களித்துக் கலந்து சின்னாள்
அருத்தி யுடனே அமர்ந்திங்
கிருத்திர் எனது வேண்டுகோ ளிதுவே.

அரசர்கள் விருந்துண்டு களித்திருக்க அந்நகரிலுள்ள கிருஷ்ணன் இராமன் என்னும் இருவர் விருந்தின் சிறப்பினைப்பற்றி ஒருவரோடொருவர் பேசுகின்றனர்.

கிருஷ்ணன்: (இராமனை நோக்கி)

[நேரிசை யாசிரியப்பா]

அரசர்க் கிட்ட அரியதோர் விருந்தை
விரிவாய் எனக்கு விளம்புதி நண்ப.

இராமன்: (கிருஷ்ணனிடம் விருந்தின் சிறப்பைப்பற்றி விரித்துக் கூறுகிறன்).

நல்லதோர் விருந்தை நவில ஒண்ணுமோ?
சொல்லுவன் ஒருவகை சோர்வில் லாதே.
நெய்யும் பாலுந் தயிரும் அளைந்தன
நால்வகை அடிசிலும் நனியிட் டனரே.
பாயச வகைதாம் பகரவொண் ணுதே.
பண்ணிகா ரங்கள் பலப்பல செய்தனர்
இட்டனர் இலைக்கலம் அட்டியில் லாமல்.
கறியும் கூட்டும் கருதரு சுவையன.
கண்ட மட்டும் உண்டனர் இருந்தே.
ஓதன வகையே ஒருபஃ தாமால்.
வள்ளுவர் குறளென அள்ளுஞ் சுவைதரு
தெள்ளிய ரஸமாம். துள்ளிய மாவடு
முதலாப் பற்பல ஊறு காய்கள்.
உம்பர் அமுதெனக் கம்பர் கவியென
வாதுமைப் பாலை வார்த்தனர் அருவியாய்.
வாழை பலாமா மதுரக் கனியும்
தாழைக் கனியுடன் தடவரைத் தேன்பெய்
தாரச் சமைத்தவக் கார வடிசிலும்
வறுவல் பொரியல் வளமிகு தொகையல்
இன்னும் பலவுடன் ஏந்தல் இட்ட
அரியதோர் விருந்து அந்நாட் டஞ்சை
** பிரிஞ்சி போசனம்; விரிஞ்சனும் சேடனும்*
விரித்துரை செய்திட விழிப்பரால்.
அருத்தியோ டுண்டவர் திருத்தியாய் மொழிவரே.

---

* பிரிஞ்சி போசனம் என்பது நீர் கலந்த பாலில் அரிசியை வேக வைத்துக் கற்கண்டு, முந்திரிப்பருப்பு, திராட்சை, ஏலம், குங்குமப்பூச் சேர்த்து, பிஸ்தா, சாரைப்பருப்புக்கள் பெய்து முன்னுளில் தஞ்சை அரண்மனையில் ஸ்ரீகாமாட்சி பாயசாபவர்களால் ஸ்ரீ நாகராஜ பண்டிதர் பார்வையில் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வந்த ஒரு சமாராதனை.

நான்காம் களம்

இடம்: டில்லி தர்பார்
காலம்: காலை
பாத்திரங்கள்: ஷா ஆலம் சலாபதுகான், பீம சிங்கு, அமைச்சர், விகடன், சேவகர்

ஷா ஆலம்: (அரசர்களை நோக்கி)

[நேரிசை யாசிரியப்பா]

புரசை யானையிற் புரவியிற் போந்த
அரசே, நீவிர் அன்புடன் கேண்மின்:
இன்று தொடங்கி இவ்விடம் நடைபெறும்
துன்றும் காட்சியைத் துகளறக் கண்டு
கடைநாள் குறித்த கந்துகப் பந்தயம்
அடைவுடன் நடாத்தும் ஆற்றல் படைத்தோர்
பத்தோ டாறு பாரம் பைம்பொன்
பரிசைப் பெறுவர்; பந்தயம் தோற்றவர்
ஆண்டு பத்தோ டாறுநம் சிறையில்
ஈண்டுப் புகுதல் வேண்டுமென் கட்டளை;
மற்றவை வழங்கும் விளம்பரம்
பெற்றதிற் கண்டு பெரிதும் அறிதிரே.

[பஞ்ச கல்யாணிப் பரியை அலங்கரித்து, ஒரு சேவகன் கொண்டுவந்து நிறுத்த, அக் குதிரை இடிமுழக்கம் போலக் கனைத்தது. அக்கனைப் பொலியைக் கேட்ட அரசர் பலரும் கலக்கமுற்றுத் தத்தம் ஆசனத்தில் வீற்றிருந்தனர்.]

ஷாஆலம்: (அரசர்களை நோக்கி)

[நேரிசை யாசிரியப்பா]

ஆசறு சீர்த்தி யரசரே! நும்முள்
தேசுறு பரியைச் செலுத்துதற் கேற்ற
வலிமை வாய்ந்த மன்னவர் ஒருவரும் இலிரோ?

தரணிசிங்கு: (ஷாயின் ஷாவை நோக்கி)

இறைவ! யானிவ் வெறும்வலிப் பரியை
நடாத்திப் பரிசைப் பெறுவேன் நயமுடன்.

ஷாஆலம்: (தரணிசிங்கை நோக்கி)

நல்லது நடத்துக! எல்லையில் புகழோய்!

[தரணிசிங்கு மன்னவன் பரியிடஞ் சென்று அதன் மீது பாய்ந்து ஏறுதலும் அப்பரி மன்னவனை உதறிக் கீழே தள்ளிவிட்டது.]

விதூஷகன்:

ஆவா! அந்தோ! அரசன் பரிமேல்
வாவியே றுதலும் மன்னனைத் தள்ளி
விரைந்தோ டியதவ் வேக வெம்பரி!
பரிபவம் என்னே! பாவம்! பாவம்!

[நகைக்கிறான்.]

ஷாஆலம்: (அரசர்களை நோக்கி)

திண்ணிய சிறையில் செஞ்சி வேந்தன்
எண்ணிரண் டாண்டுகள் இருப்பது கடனும்;
வந்தமன் னவர்தம் வளம்பதி
சிந்தை மகிழ்வுடன் திரும்பிச் செல்கவே.

இரண்டாம் அங்கம்

முதற் களம்

இடம்: செஞ்சிப்பட்டணம்

காலம்: காலை

பாத்திரங்கள்: அமைச்சர், தானைத்தலைவர், மதுரகவி, அவன் நண்பன்.

நண்பன்: (மதுரகவியை நோக்கி)

[நேரிசை யாசிரியப்பா]

மன்னவன் டில்லி மாநகர் சென்றபின்
இந்நகர்ச் செய்திக ளெவையும் அறிந்திலன்.
அரசிளங் குமரனை அரசியீன் றதுமவன்
கரைசெயற் கரிய கலைகள் கற்றதும்
விஞ்சையில் விஞ்சிய வேந்தர் விரும்பும்
செஞ்சிப் புலவீர், செவ்விதிற் செப்புமின்.

மதுரகவி:

மன்னவன் மனைவி மகனை யீன்றதும்
அன்னவன் ஆற்றல் அனைத்துங் கூறுவன்:
நாயகன் டில்லி நகர்செல் காலையில்
தூயகற் புடைய தோமில் சிந்தையாள்
இலக்குமி போன்ற இரமா பாயெனும்
கலக்கமில் அரசி கருக்கொண் டிருந்தனள்;
கோசலை வயிற்றிற் குனிசிலை யிராமன்
மாசறத் தோன்றிய மாட்சிமை போல

நல்லதோ ரோரையில் நானிலம் புரக்கச்
செல்வனை யீன்றனள்; செயசிங் கென்று
நாமமு மிட்டனர்; நாடொறும் வளரும்
சோமனைப் போலத் துலங்கினன் மைந்தன்;
நல்லா சிரியனை நாடி நலம்பெற
எல்லாக் கலைகளும் எளிதிற் பயின்றனன்
செயசிங் கென்னுஞ் சிங்கக் குருளை;
வயப்பரி மதகரி வளம்பெற ஏறி,
நூற்கடல் நுழைந்து நுண்ணிதி னுய்ந்து,
மன்னுயிர்த் துணைவன் மகமது கானெனும்
தன்னிக ரில்லாத் தனிவீ ரனுடன்
காட்டிற் புகுந்து கரடி புலிகளை
வேட்டை யாடி விளையாட் டயருநாள்
மந்திரக் கிழவர் தந்திரத் தலைவர்
தந்தமக் குதித்த தனயன் போலச்
சிந்தை மகிழ்ந்து திருநகர் திருத்தித்
தேவர் கோட்டம் திருவிளக் கேற்றிப்
பாவலர்க் கருநிதி பண்புட னுதவி
ஆதுலர்க் கன்னம் அன்புட னளித்து
அறவோர் களிக்க அரும்பொருள் ஈந்தே
சிறையி லிருந்து சிலரை விடுவித்
திறையிலோர் பகுதி யிலவச மாக்கி
இத்தகை மாநக ரீரறு தினங்கள்
வித்தகப் புத்திர விழாக்கொண் டாடி
வயந்தனில் மிக்க வானவர் பதிக்கு
சயந்தன் போலத் திருவவ தரித்த
மகப்பேற் றைத்திரு முகத்திற் றீட்டி
விரைவி லமைச்சர் விடுத்தனர்
தரணி சிங்கு தராபதி தனக்கே.

இரண்டாம் களம்

இடம்: செஞ்சிப்பட்டணம்

காலம்: மாலை

பாத்திரங்கள்: இரமாபாய், ஜயசிங்கு.

[இராமாபாய் தனித்திருந்து வருந்துகிருள். அச்சமயம் ஜயசிங்கு அந்தப்புரம் பிரவேசிக்கிருன்.]

இரமாபாய்: (தனியே,)

[நேரிசை யாசிரியப்பா]

"அதிசயம் ஒருவரால் அமைக்க லாகுமோ?
துதியறு பிறவியின் இன்ப துன்பமும்
விதிவய மென்பதை மேற்கொள் ளாவிடில்
மதிவலி யால்விதி வெல்ல வல்லமோ?"
என்றே பெரியார் இசைத்த மொழிப்படி
துன்றுவ தல்லால் தோன்றுவ துளதோ?
என்றுணைக் கணவன் இராச சேகரன்
சென்றதும், விதியாற் சிறைசெறிப் புற்றதும்
ஆ! என் விதியினை யாரிடம் உரைப்பேன்!
தேவன் திருவுளச் செயலோ இதுதான்!

[மைந்தன் வருகிருன்.]

வருக வருக! மன்னவன் மதலாய்!

ஜயசிங்கு: (அன்னையை வணங்கி)

அன்னையே! அவலம் யாதோ? அறைதி!

இரமாபாய் :

என்கண் மணியே! என்னுனக் கொளிப்பது?
மைந்தனே! டில்லி மாநக ரிருந்து
செந்தனிக் கோன்முறை செலுத்து மரசன்
எழுதிய திருமுகம் ஏற்றவன் ஆணையை
வழுவி நடத்தல் பழுதெனத் தந்தை
இந்திரப் பிரத்தமாம் எழிலுறு நகர்க்குக்
கந்துகப் பந்தயம் காண்பான் சென்றனன் ;
புரவியின் றேற்றப் பொலிவைக் கண்டு
அரச ரனைவரும் ஆசனத் திருக்க
புரவலன் சொன்னசொற் புண்வாய்ப் பட்டுத்
தரணி சிங்குநின் தந்தையக் கந்துகம்
ஏற முயன்றனன் ; இறுதியிற் றேல்வியுற்
டாறொடு பத்தாண் டருஞ்சிறைப் பட்டனன்.
ஆண்டொரு பத்தோ டைந்தும் கழிந்தன.
ஈண்டோ ராண்டில் இறைவன் வந்துறும்
என்பது கருதி யிருந்தனன்
துன்ப மெல்லாந் தொலையுநாள் குறித்தே.

ஜயசிங்கு : (அன்னையை நோக்கி)

நேரிசை யாசிரியப்பா

அன்னையே! அவலம் ஆறுக! அடியேன்
இன்னே போகி யிறைவனைச் சிறைமீட்
டிடக்குச் செய்யுந் துடுக்குக் குதிரையை
அடக்கி டில்லி யரசகே சரிபால்
பரியுடன் பற்பல பரிசும் பெற்று
விருது நாட்டி வியனகர் மீள்வேன்!
விடையருள் புரிக!

இராமாபாய் : (ஜயசிங்கை நோக்கி)

வேத்திளங் குமர,
கொம்பைப் பிரிந்து குழையும் கொடிபோல்
வெம்பி யுள்ளம் கம்பித் திருந்தனன் !
வெண்ணெய் திரண்டு வெளிப்படும் பொழுது
மண்ணின் தாழி வாய்விண் டதுபோல்
நீயும் நீங்க நினைதியோ ?
சேயைப் பிரியவென் சித்தந் துணியுமோ ?

[ஜயசிங்கு வருந்துகின்ற அன்னையின் துயரத்தை ஒருவாறு ஆற்றி, அவளிட மிருந்து விடைபெற்று, தன்னுயிர்த் தோழனாகிய மகமதுகானுடன் டில்லிக் குப் புறப்பட்டுச் செல்கிறான்.]

மூன்றாம் களம்

இடம்: டில்லி

காலம்: நண்பகல்

பாத்திரங்கள்: சக்கரவர்த்தி, தானைத் தலைவன், அமைச்சர்.

[நகர மாந்தருள் ஜயன், விஜயன் என்னும் இரு நண்பர் ஒருவரோடொருவர் பேசிக்கொள்கின்றனர்.]

ஜயன்: (விஜயனை நோக்கி)

நேரிசை யாசிரியப்பா

கன்னிமா மதிலின் கனகச் சாயலால்
பொன்னுல காயதப் புலவர் வானெனச்
செப்பரு மிந்நகர்த் திருவீ தியிலே
ஒப்புயர் வில்லா வொண்பரி யேறி
வயப்புலி போலிரு வாட்படை வீரர்
நயப்புடன் வருதலை நண்ப நோக்கு!
கண்டவர் விரும்புமிக் காளை வீரர்
விண்டலத் துறையும் வேந்தன் குமரரோ?
மதனரோ? முருகரோ? மாநிலத் தவரோ?
இதமுறும் எழிலார் எவர்கொலோ அறியேன்.

விஜயன்: (ஜயனை நோக்கி)

வரவர அறிகுதும் வரவைப்
புரவலற் காண்பான் போந்தனர் போலுமே.

[ஜயசிங்கும் மகமதுகானும் அரசனைக் காண விரும்புவதாகக் காவலனிடம் கூறுகின்றனர். காவலன் அரசன் உத்தரவு பெற்று அவர்களை அரசவைக்கு அழைத்துச் செல்கிறன்.]

ஜய சிங்கு: (அரசனை வணங்கி)

நேரிசை யாசிரியப்பா

எண்டிசை புகழும் இராச ராசனே
என்னகர் செஞ்சி: ஜயசிங் கென்பேர்
மன்னவன் தரணி சிங்கின் மகன்யான்;
எங்கணும் உள்ள இறைவர் எவரையும்
பங்கம் செய்தநின் பரிமா அடக்கி,
எந்தையை மீட்பான் எண்ணி,
வந்தனன் மகுட வர்த்தனர் ஏறே.

ஷா ஆலம்: (ஜய சிங்கை நோக்கி)

நேரிசை யாசிரியப்பா

மைந்தனே, உன்றன் வாய்மொழி கேட்டுச்
சிந்தை மகிழ்ந்தேன். நீயோ சிறுவன்!
இந்தத் தொழிலில் ஈடு படுதல்
விந்தையே யாகும். விடுவிப் பேனுன்
தந்தையை; அழைத்துத் தடையறச் செல்க.

ஜயசிங்கு: (அரசனை நோக்கி)

நன்று நன்று நரேந்திர நின்மொழி.
அரசரிற் பிறந்தவற் கழகோ விதுதான்!
இரந்து பெறுதல் இழிவிழி வென்றும்.
மூந்துறக் கலினமா முயற்சியி னடக்கித்

தந்தையை மீட்டலே தனயன் கடனும்!
இறைவ! விடையருள்!

ஷா ஆலம்: (ஜய சிங்கை நோக்கி)

எண்ணித் துணிக!
வெற்றித் திருநின் வியன்புயம்
உற்று வாகையை உனக்கருள் புரிகவே.

நான்காம் களம்

இடம் : டில்லி நகரில் பீமசிங்கின் இல்லம்

காலம் காலை

பாத்திரங்கள் : அரசர், அமைச்சர், நகரமாந்தர் இராதாபாய், விதூடகன் அனைவரும் காட்சி காண வந்திருக்கின்றனர்.

[ஜயசிங்கு குதிரையை நடாத்தி வெற்றி யடைந்து வந்ததைப் பற்றிச் சக்கரவர்த்தியும் நகர மாந்தரும் புகழ்ந்து பேசியதைத் தானைத்தலைவன் பீமசிங்கு தன் மனைவி இராதாபாயிடம் வியந்து கூறுகின்றான்.]

பீமசிங்கு : (இராதாபாயை நோக்கி)

நேரிசை யாசிரியப்பா

பாவலர் பன்னயம் படத்தொடுத் தமைத்த
நாவருங் கிளவிநேர் நடையுறு நங்காய்,
தரணி சிங்கு தராபதி மைந்தன்
புரவியின் மீது புலிப்போத் தைப்போற்
பாய்ந்து கலினம் பற்றினன் ; பக்கத்
தாய்ந்து நின்றவ ரகன்றனர் ; அசுவம்
எற்றிய பராகம் இருங்கடல் தூர்க்க
ஒற்றையா ழித்தேர் உயர்பரி யேழும்
பிந்துற முந்துறும் ! பெரும்புறக் கடலில்
உந்தும் அலைபோல் ஓங்கும் ! ஒடுங்கும் !
மங்குலின் முழக்கமும் மறிகடல் ஓதையும்
சிங்கநர்ச் சனையும் திடுக்கிடக் கனைக்கும் !
'பொங்குளைப் புரவியப் புரவலன் மகனை

எங்கெடுத் தேகிய தோ'என் றார்சிலர் ;
இளைஞன் பரிமிசை இருப்பனென் பார்பலர் ;
களைப்பனோ வென்றே கழறினர் சிற்சிலர் ;
மதிவலான் அந்த மகமது கானெனும்
துதிசெயத் தக்க தோழர், இடைவிடாக்
கனைப்பொலி குதிரையின் களைப்பைக் காட்டும்;
இனியொரு கணத்தில் எங்கோன் வரும்என்
றிசைத்தனன், சயசிங் கியாவருங் காணக்
குசைப்பரி யிழிந்துநம் கோமுன் நின்றனன்.
மன்னுசீர் டில்லி மன்னவன் மகிழ்ந்து,
சின்னஞ் சிறுவனைத் திருப்புய மணைத்து,
மடிமீ திருத்தி, வாட்டந் தவிர்த்துப்
'படிமீ திந்தப் பாலகற் கொப்பிலை !'
என்று கூறி, 'இராசா சயசிங்
கின்று முதலுனக் கெழிற்பெயர் !' என்றான்.
மாந்த ரனைவருந் தாந்தா மகிழ்ந்து
நேசமார் சயசிங் கேசலில் வெற்றியைப்
பேசி யன்புடன் பெருங்களிப் பெய்தினர்.
மய்யார் கலிசூழ் மாநிலந் தன்னில்
பொய்யா மொழிநம் புலவர் பெருமான்
தந்தை மகனெனத் தனித்தனி குறளில்
விந்தை யாக விரித்தவா சகத்திற்
கிந்தச் சிறுவனை யிலக்கியங் கண்டனன் !

இராதாபாய் : (பீமசிங்கை நோக்கி)

காதல, மெய்யே. காவலன் மதலையை
ஆதர வாக ஆண்டவன் அருள்கவே.

விதூடகன் : (தனியே)

அரிவை சிலேடையாய் அறைந்தமொழியின்
கருத்து மகட்குக் காதலன்
திருத்தகு நம்பியாத் தேர்ந்தது தானே !

ஐந்தாம் களம்

இடம்: டில்லி தர்பார்
காலம்: காலை
பாத்திரங்கள்: ஷாஆலம், தரணிசிங்கு, ஜய சிங்கு, சில பிரபுக்கள்.

[தானைத்தலைவன் பீமசிங்கு அரசன் சபை முன் வந்து, சலாம் செய்து நிற்கின்றான்.]

ஷாஆலம்: (பீமசிங்கை நோக்கி,)

நேரிசை யாசிரியப்பா

உலகெலாம் என்கோல் ஓங்கச் செய்திடும்
அலகிலா வன்மைசால் அநிகத் தலைவ,
வருக, அமர்க.

பீமசிங்கு: (அரசனை நோக்கி,)

மன்னவர் மன்னவ,
காசினி புரக்கும் காவலர் பலரை
மாசு படுத்திய வாம்பரி யடக்கி
வல்லமை காட்டி மாநிலம் ஏத்த
எல்லையில் புகழ்க்கொடி ஏற்றிய சிங்கம்,
தரணி சிங்கு தந்தருள் தங்கம்,
வரைநிகர் திண்டோள் மைந்தன் றனக்கு
மாதவத் தாலே வந்தவென் மகளாம்
சீத மதிமுகச் செந்திரு வனையாள்
தூய மொழியாள் தோமில் சிந்தையாள்

ஆய கலைகள் அறிபது மினியைத்
திருமணம் முடிப்பான் சிந்தையிற் கருதினன்;
திருவுளம் என்கொலோ? செங்கோல் வேந்தே.
தரணி சிங்குடன் சார்வாய் இணங்கித்
திருமக ளுடனே திருமால் போலச்
சேர்த்தி செய்து சிறியேன்
ஆர்த்தியைப் பூர்த்திசெய் தாண்டரு ளரசே.

[ஷா ஆலம் பீமசிங்கு மொழிந்த வாசகத்தைக் கேட்டு மகிழ்ச்சியுற்று, தரணி சிங்கு மன்னவனை நோக்கி.]

ஷா ஆலம்:

நேரிசை யாசிரியப்பா

செஞ்சி நகராள் செங்கோல் வேந்தே.
மஞ்சன் மணத்திலுன் மனநிலை கூறுக.

தரணிசிங்கு:

சந்திர வட்டத் தனிக்குடைக் கீழிருந்
திந்திரர்க் கிணையா இந்நிலம் புரக்கும்
மன்னவர் திலக, மகனும் யானும்
உன்னுடை உறவினர்; உன்னுளப் படியே
நற்றிரு மணவினை நடைபெற லாமே
மற்றுள மாநகர் மாந்தர் மகிழவே.

ஷா ஆலம்: (பீமசிங்கை நோக்கி,)

தானைத் தலைவ, தமியனுக் கோர்மகள்
தானிருந் தாலித் தனயற் களிப்பேன்;
உனக்கு நேர்ந்த ஒப்பரும் பாக்கிய
எனக்கு நேர்ந்ததா எண்ணி மகிழ்ந்தேன்.

ஆதலின், அண்ணல்! அனைத்தும்
நீதறச் செய்க திருமணச் சிறப்பே.

[ஷாஆலம் சோதிடரைக்கொண்டு திரு மண நாளைக் குறிப்பிட்டு, அமைச்சரை நோக்கி, தேய மன்னர்களுக்குத் திருமுகம் அனுப்பவும், நகரை அலங்கரிக்கவும், கட்டளையிட்டு, தரணிசிங்கு மன்னவனை நோக்கிச் செஞ்சி நகரினர்க்குக் கடிதம் அனுப்பக் கட்டளையிடுகிறன்.]

மூன்ரும் அங்கம்

முதற் களம்

இடம் : செஞ்சி நகரம்
காலம் : காலை
பாத்திரங்கள் : இரமாபாய், அமைச்சன் முதலானோர்.

[இரமாபாய் கவலை கொண்டிருக்கிருள் : இரு சேவகர் தரணிசிங்கு எழுதியனுப்பிய கடிதத்துடன் வருகின்றனர். அமைச்சன் கடிதத்தை வாங்கி அரசி முன் படிக்கிருன்.]

அமைச்சன் :

[நேரிசை யாசிரியப்பா]

இஞ்சிசூழ் செஞ்சியில் விஞ்சிய புகழுடன்
தன்னுயிர் போல மன்னுயிர் காக்கும்
மந்திரத் தலைவரும் தந்திரத் தலைவரும்
இந்தநற் கடிதம் இன்புடன் காண்மின்.
நந்தஞ் சிறுவன் நரேந்திரன் ஜயசிங்
கிந்த மாநகர் எழிற்பரி யடக்கினன் ;
மன்னவன் அவன்பால் மகிழ்ச்சி யுற்றனன்.
இந்நகர்த் தானைக் கிறைவன் பீமசிங்
கென்னும் பெருந்தகை யீன்ற குமாரி
பதுமினி தனைநம் பாலற் களிக்க
இதமுற எண்ணினன். யாவருஞ் சிறுவன்

காப்பணி மணநாள் காணக்
கோப்பெருந் தேவியைக் கூட்டி வருகவே.

தரணிசிங்கு

[அரசி கடிதங்கொண்டு வந்த வீரர்க்குப் பரிசளித்து, நகரை யலங்கரித்து, யாவரும் டில்லிக்குப் புறப்பட ஆயத்தப்படும் படி அமைச்சருக்குக் கட்டளையிடுகிறான். அவ்வாறே நகரை யலங்கரித்து, யாவரும் புறப்படுகின்றனர்.]

[இராமன், கிருஷ்ணன் என்ற இரண்டு நண்பர், செஞ்சி நகர்ச் சிறப்பைப்பற்றி உரையாடுகின்றனர்.]

இராமன் : (கிருஷ்ணனை நோக்கி)

[நேரிசை யாசிரியப்பா]

மஞ்சுதோய் மதிலில் மணிக்கொடி நாட்டவும்,
செஞ்செவே தோரணம் தெருக்களில் கட்டவும்,
ஆலயம் புதுக்கி யணிவிளக் கேற்றவும்,
சாலையும் சந்தியும் சரிவரச் சமைக்கவும்,
ஆதுலர்க் காடையும் அன்னமும் அளிக்கவும்,
வேதியர்க் கவாக்கெட வெறுக்கை ஈயவும்,
பல்லியம் முழக்கவும், பாவையர் பல்லாண்டு
சொல்லவும், அந்தணர் சுருதி யோதவும்,
செஞ்சிமா நகரைச் சிறப்புடன் நாகர்
விஞ்சைய ருலகுபோல் விளக்கக் காரணம்
என்னே! இயம்புதி இன்புடன் நண்ப!

கிருஷ்ணன்: (இராமனை நோக்கி)

பொன்னகர் புதுக்கினர் புதுமணங் குறித்தே;
மன்னிளங் குமரன் வதுவை காண்பான்
இந்நகர் மாந்தர் யாவரும் மகிழ்வுடன்
எல்லையில் புகழ்சால் டில்லிமா நகர்க்குச்
செல்வார்; யாமும் செல்வேம்
செல்வன் திருமணச் சிறப்புக் காணவே!

இரண்டாம் களம்

இடம்: டில்லி

காலம்: காலை

பாத்திரங்கள்: ஷாஆலம், தாணிசிங்கு, ஜயசிங்கு, பீமசிங்கு, அமைச்சர், நகரவாசிகள்.

[அரசன் கட்டளைப்படி டில்லி அலங்கரிக்கப்படுகிறது. செஞ்சி நகர் மாந்தரும், பல தேச மன்னரும் வந்து சேர்கின்றனர். யாவரும் அரசனால் வரவேற்கப் படுகின்றனர்.]

[டில்லி அலங்காரம், கலியாண வைபவம், ஊர்வலம், விருந்து இவைகளைப்பற்றி அந்நகர் வாசிகளாகிய நாராயணன், கோவிந்தன் என்ற இருவர் விவரிக்கின்றனர்.]

நாராயணன்: (கோவிந்தனை நோக்கி)

[நேரிசை யாசிரியப்பா]

வானவ ரைத்திரு மணத்துக் கழைத்தல்
மானவே மதின்மேல் மணிக்கொடி நாட்டினர்;
மகரதோ ரணங்கள் மாநகர் எங்கும்
மிகப்பொலி தரவே விரித்தனர்; வீதியில்
மூரிவான் முழக்கென முரச மெற்றினர்;
தூரியம் பல்லியம் துந்துபி யிசைத்தனர்;
வாழை கமுகு வளம்பெறக் கட்டினர்;
தாழைக் குலைகள் தாழ நாற்றினர்;

செஞ்சிமா நகரார் சிறப்புடன் சேர்ந்தனர்;
வஞ்சிமா நகரார் வனப்புடன் வந்தனர்;
மராடர் மாகதர் மத்திரர் மாளவர்;
விராடர் கூர்ச்சரர் மிலேச்சர் விரவினர்;
சிங்களர் கொங்கணர் சீனர் சோனகர்
அங்கர் கலிங்கர் அவந்தியர் அயோத்தியர்
கேரளர் பாண்டியர் கிளர்படைச் சோழர்
சேரர் சத்தத் திவினர் சேர்ந்தனர்;
வல்லமை வாய்ந்த டில்லி காவலன்
எல்லோ ரையும்வர வேற்றுற வாடினன்;
திருமணச் சிறப்பைச் சிறிதென்
ஒருநா வாலுனக் குரைத்துவப் பேனே!

கோவிந்தன்: (நாராயணனை நோக்கி)

நேரிசை யாசிரியப்பா

சங்கு தவழ்கடல் ஏழிற் றந்தன
கங்கை காவிரி கன்னி நீரினல்
சிங்கவே றனைய ஜயசிங் குக்கு
மங்கல மஞ்சன மரபி னூட்டினர்;
பணியாற் றுபவர் பாதுஷா அனுப்பிய
அணியா டைகளால் அலங்கரித் தனரே;
சந்தனக் களபக் கந்தம் பூசினர்;
நிலவை யொத்த நித்தில மாலையும்,
பலவகை யிரத்தினம் பதித்த தொங்கலும்,
மல்லிகை முல்லை மலர்ந்த ரோசா
நல்லெழின் மாலையும், நலம்பெறச் சூட்டினர்;
நெற்றியிற் றிலதம் நிலவுறத் தீட்டினர்;
இத்தகைச் சிறப்பெலாம் இயற்றி யினிதே
வைத்தனர் யானைமேல் மைந்தனை மாதோ!

வானளாவிய மாண்புகழ் டில்லி
மாநகர் வீதியில் மதகரி மீது
முருகவே ளொத்த மொய்ம்பன் பவனி.
வருகையைக் காண வந்தவர் கூடினர்;
பேதை முதற்பே ரிளம்பெண் ணிறு
ஓதும் எழுவகை ஒண்டொடி மாதருள்
தோள்கண் டவருந் தொடுகழற் கமலத்
தாள்கண் டவருந் தடக்கைகண் டவரும்
வாள்விழி மீட்டும் வாங்குந ரிலரால்!
இன்னண மெழுவகை மாதரு மேமுற
மன்னவர் மாநகர் மாந்தர் மகிழ,
நல்லெழில் மாட நகர்வலம் வந்து,
மல்லுயர் தோளான் மதகரி யிறங்கிப்,
பொன்னொளிர் தவிசிற் பொலிந்தனன்
அன்னமென் னடையார் அயினிநீர் சுற்றவே!

நாராயணன்: (கோவிந்தனை நோக்கி)

நேரிசை யாசிரியப்பா

அந்தணர் அருமறை மந்திர மோதினர்;
மந்தணர் பொற்பூ மாரி பெய்தனர்;
சுந்தரி பதுமினித் தோகைக் கணிகலன்
செந்திரு வொப்பச் சிங்கா ரித்தனர்;
மயற்கை யுலகென வழங்குதற் கொப்பச்
இயற்கை யழகைச் செயற்கையால் மறைத்தனர்;
மின்னிடை நுடங்க மேகலை பூட்டினர்;
புன்னையந் தாதுநேர் பொற்பொடி பூசினர்;
வங்கியும் கடகமும் செங்கையிற் செறித்தனர்;
பங்கயச் செல்வியும் பதுமநா பனும்போல்
நங்கையை நம்பிபால் நண்ணவ மைத்தே

இங்கிதப் பாடல் இயம்பி
மங்கையர் மகிழ்ந்தலர் மாரிபெய் தனரே.

கோவிந்தன் : (நாராயணனை நோக்கி திருமணம்)

நேரிசை யாசிரியப்பா

மங்கல வாத்தியஞ் சங்கினம் முழங்க
மங்கைதன் கழுத்தில் மங்கல நாணைச்
சிங்கவே ளுஞ்செய சிங்கு சேர்த்தினன் ;
அங்கியிற் பொரியை அள்ளித் தூவினன் ;
அங்கனை யடியெடுத் தம்மிமேல் அமர்த்தினன் ;
அங்கையற் கண்ணி அருந்ததி
மங்கையைக் கண்டு மகிழ்ந்தனள் மாதோ !

நேரிசை யாசிரியப்பா

நாராயணன் :

விஞ்சிய புகழான் டில்லி வேந்தன்
செஞ்சி யரசாம் செயசிங் குக்கு
இணையிலா வயிரம் இழைத்த வாளும்
பணையப் பரியும் பரிசாத் தந்தனன் ;
மன்னவர் பலரும் மணமக் களுக்குப்
பொன்னணி யாரம் பூம்பட் டளித்தனர் ;
நாமவேற் றுனை நாயக னை
பீமசிங் கென்னும் பெருந்தகை யாளன்
மருமக னுக்கும் மகளுக் கும்பல
அருங்கல னுடை ஆனை குதிரை
பச்சைக் கற்பூ ரம்விளை பத்தூர்
இச்சை யுடனே யீந்தனன் பரிசாய்;
பரதசங் கீதம் பார்த்துநின் றுர்சிலர் ;
இரத விருந்துண் டின்புற் றுர்பலர் ;

மங்கல துந்துபி சங்கின மார்ப்ப
இங்கிதப் பாடல் மங்கையர் பாடினர் ;

விகடன் : (தனியே நின்று)

மணமென் றுலிது தான்மணம் ! மற்றைய
மணமெனப் படுவதம் மணமே யாகும் !

நாராயணன் : (கோவிந்தனை நோக்கி)

தரணி சிங்கு தன்மக னுடனே
அரசன் விருந்தாய் அமர்ந்தனன் சின்னுள் ;
வந்தவர் மன்னனை வாழ்த்தித்
தந்தம் மாநகர் தனையடைந் தனரே.

தரணி சிங்கு : (அரசனை நோக்கி)

நேரிசை யாசிரியப்பா

சிந்தை யுவந்தேன் ! சிறப்பெலாம் பெற்றேன் !
மைந்தனும் யானும் வளநகர் செல்ல
வேந்தர் வேந்தே விடையருள் ;

ஷா ஆலம். (தரணி சிங்கை நோக்கி)

வேலோய்,
இன்று முதலிறை யிறுக்க வேண்டா ;
வென்றிக் கறிகுறி யாயதை விட்டனன் ;
என்னை மறவேல் ; ஏகுக

ஷா ஆலம் : (ஜய சிங்கு அரசனை வணங்கி நிற்கிறான்)

எறும்வலி
அய்ய, நீ காட்டிய அருஞ்செய லனைத்தும்
வையத் துய்யுநாள் வரையிலும் மறவேன்.
சென்று வருக சிறுவ !

[மகமத்கான் அரசன்முன் சலாம்செய்து
நிற்றலும்]

(மகம்மதுகானை நோக்கி)

மதிவலாய்,
என்னுடைப் பரியுனக் கீந்தனன்;
மன்னன் மகனுடன் மருவி வாழ்கவே.

மூன்றாம் களம்

இடம்: செஞ்சி நகரம்

காலம்: காலை

பாத்திரங்கள்: ஜயசிங்கு, அமைச்சன்.

[சின்னாட் சென்றபின் தரணிசிங்கு மன்னவன் பிணி வாய்ப்பட்டுப் பரமபத முற்றனன். அவன் மனைவி இரமாபாய் கணவனுடன் தானும் உடன்கட்டையேறி உயர்பதமுறுகின்றனள். பெற்றோர் பிரிவால் வருந்துகிற ஜயசிங்கைத் தேற்றி, அரசாட்சியைக் கைக்கொள்ளும்படி அமைச்சன் வேண்டிக் கொள்ளுகிறான்.]

அமைச்சன்: (ஜய சிங்கை நோக்கி)

நேரிசை யாசிரியப்பா

மரண மென்பதை மாற்ற வல்ல
அரணிலை; ஆதலால், அரசன் பிணிப்பேர்
வலையிற் பட்டு மன்னுயிர்ப் பொறையாம்
நிலையா வுடலை நீத்துப் பரம
பதமுற் றனன்; நின் அன்னையும் பரிவால்
இதமுறக் கணவனோ டேறிச் சிதையில்
உடலைக் கிடத்தி உயர்பத முற்றாள்!
ஆதலி னைய அவலம் ஒழிக;
தாதைக் குரிய சடங்குக ளாற்றுக.
மூதறி வாளரும் முதியரும் விரும்பச்
சிங்கா சனந்தனிற் சிறக்க வமர்ந்து

துங்க மாமுடி சூடிச் செங்கோல்
தாங்கி மாநிலம் தவாவலி யுடனே
ஓங்கிய புகழை யுறுக.

ஜயசிங்கு: (அமைச்சனை நோக்கி)

ஒப்பினன்!
இந்தநன் மொழியை ஏற்றனன்
சிந்தையிற் கொண்டனன் திருமுடி சூடவே.

நான்காம் களம்

இடம் : செஞ்சி

காலம் : காலை

பாத்திரங்கள் : ~~ஜயசிங்கு, மந்திரி, மகம்மதுகான், நகரமாந்தர்.~~ சித்திராங்கன், சித்திரசேனன்.

[நண்பர் இருவர் உரையாடுகின்றனர்.]

சித்திராங்கதன் : (சித்திரசேனனை நோக்கி)

நேரிசை யாசிரியப்பா

பைம்பொற் றவிசில் பதுமினி யுடனே
சிம்புளை நிகர்சய சிங்கை யேற்றி
ஆர்கலிப் புனலும் ஆற்று நீரும்
சீர்பெறக் கொணர்ந்து தெய்வம் பராவி
மாதவர் மறையவர் மந்திரக் கிழவர்
வேதமந் திரங்கள் விளம்பிநீ ராட்டினர் ;
மூதறி வாளரும் முதியரும் கூடிச்
சோதிமா மவுலி துலங்கச் சூட்டினர் ;
பல்லாண் டிசைத்தனர் பாவையர் ; மாந்தர்
எல்லையில் இன்பம் எய்தினின் றனரே.
அரசனு மவரவர்க் காடையா பரணம்
பரிவுட னளித்திரு பத்திரண் டாண்டில்
செங்கோல் தாங்கிச் சிறப்புடன்
துங்க மாமுடி சூடினன் மாதோ.

சித்திரசேனன் :

நேரிசை யாசிரியப்பா

மன்னுயிர் தம்மைத் தன்னுயிர் போல
இன்னுரை கூறி யின்புடன் காத்தே
இரணிய னைப்போ லிடர்செய் கின்ற
முரணுடைக் கொடியரை முடித்துச் சிட்டருக்
காதர வாக அரசுசெய் கின்றான்.
மாதமும் மாரி வழங்க மாநிலம்
ஆதி மனுவென அனைவரும் புகழ
'வெள்ளமும் பரவையும் விலங்கும் வேசையர்
உள்ளமும் ஒருவழி ஓட'வாள் கின்றனன்.
மன்னுயிர்த் தோழனும் மகம்மது கானைத்
தன்னுடைச் சேனைத் தலைவ னாக்கினன்;
ஆனை குதிரை ஆட்பெரும் படையுடன்
தானைப் பெருக்கினன் தவாவலி யுடனே;
'எய்யென எழுபகை யெங்கு மின்மையால்
மொய்பொரு தினவுறு முழவுத் தோளினன்
வையக முழுவதும் வறிஞன் ஓம்புமோர்
செய்யெனக் காவல் செய்கின் றனனால்
சிங்கவே றனையான்; செகத்தில்
எங்கு மிவனிசை பொங்கிப் பொலிகவே!

நான்காம் அங்கம்

முதற் களம்

இடம் : ஆர்க்காடு

காலம் : காலை

பாத்திரங்கள் : நவாபு சைதுல்லாகான், தோன்ற மல்லன், பாளயப்பட்டுக்கள்.

சைதுல்லா : (தனக்குள்)

நிலைமண்டில வாசிரியப்பா

செஞ்சி மன்னவன் சயசிங் கென்பான்
விஞ்சிய் புகழுடன் விளங்கு கின்றனன் ;
பரியடக் கியதும், பாதுஷா இடத்தில்
பரிசு பெற்றதும், படைத்தலை வன்மகள்
வடிவிற் சிறந்த மங்கையை மணந்ததும்,
படையைத் திரட்டிப் பலப்படுத் தியதும்,
ஆட்சிச் சிறப்பும், அவன தாற்றலும்
மாட்சிமை யாக வாழ்வதுங் கண்டனம்.
என்னே யிவன்புகழ் இருந்தவா றிவனை
இன்னே யழித்திடற் கேற்ற சூழ்ச்சி
நாடுதல் வேண்டும். நீடு புகழான்
பரக்ஸியர் மகுடம் பரித்ததைக் குறித்துப்
பரிவுடன் பற்பல பாளயத் தார்களை
விருந்துக் கழைத்து விருப்புடன் அவருளம்
தெரிந்து கொள்ளுதல் சிறப்புடைத் தாமே.

[சைதுல்லாகான் பாளயத்தார்களுக்குக் கடிதம் எழுதியனுப்புகிறான். யாவரும் அவன் அழைப்புக்கிணங்கி வருகின்றனர்.]

சைதுல்லா : (சிற்றரசர்களை நோக்கி)

நேரிசை யாசிரியப்பா

பாளயத் தார்களே, பரிவுடன் கேண்மின் :
பரக்ஸியர் செங்கோல் பரித்த வைபவப்
பெருமைகொண் டாடத் தருவித் தேனுமை ;
உங்கள் வரவுக் குவந்தனன் ; செஞ்சியில்
செங்கோல் புரிசய சிங்கு மன்னவன்
வந்திலன் பாரீர் ! வயப்படை யீட்டினன் ;
சிந்தையில் நம்மைச் செகுத்திட எண்ணினன்.

ஓர் பாளயப்பட்டு : (சைதுல்லாகானை நோக்கி)

ஆம் அது மெய்யே ; அதிகம் பெருக்கினன்.

சைதுல்லா : (அரசர்களை நோக்கி)

நாமவன் செயலினி நாடுதல் வேண்டும் :
நீவிர் யாவரும் நெடுந்துணை செய்யின்
மேவலன் றன்னை வென்றிடல் எளிதாம் ;
இந்தநாள் வரைநீர் இறுக்கவேண் டியவரி
வந்ததா ? இரசீது தந்திடு வேன்வரி
ஒருவகைப் போர்ப்படைக் குதவி செய்திடும் ;
விரைவிலோர் தூதனை விடுப்பன் ; செஞ்சிமன்
வரியைச் செலுத்த மறுக்கு மாயின்
தெரிவிப் பேனும் சேனை யுடனே ;
பொருதற் குதவி புரிய
வருதல் வேண்டும் ; வந்தனம், சென்மினே.

O,2:115
34695

இரண்டாம் களம்

இடம்: செஞ்சிக்கோட்டை

காலம்: காலை

பாத்திரங்கள்: ஜயசிங்கு மன்னவன், மந்திரி முதலானவர்கள்.

[ஓர் தூதன் வரவை ஜயசிங்கு மன்னவனுக்குக் கடைகாவலன் தெரிவிக்கிறான்]

கடைகாவலன்: (அரசனை நோக்கி)

நேரிசை யாசிரியப்பா

அரச, நிற் காண யாவனோ அறியேம்
விரசிப் போந்தனன் வியன்கடை வாயிலில்.

ஜயசிங்கு: (காவலனை நோக்கி)

அன்னவற் றருக

காவலன்: (தூதனை நோக்கி)

அரசன் அழைத்தனன்
இன்னே செல்க இறைவன் திருமுனே

[தூதனாக வந்த தோன்றமல்லன் உள்ளே புகுந்து காணிக்கையைச் சமர்ப்பித்துக் கூறுகிறான்.]

தோன்றமல்லன்: (ஜயசிங்கை நோக்கி)

புரவல, தூத னாகப் போந்தனன்

ஜயசிங்கு: (தூதனை நோக்கி)

வருக; அமர்க, வந்தவா றியம்புக.

தோன்றமல்லன் : (ஜயசிங்கை நோக்கி)

அய்யனே, ஆர்க்காட் டரசன் சொன்ன
மெய்யுரை விளம்ப விரவிய தூதன் :
என்னுரை யன்றிவ ணியம்புவ தெல்லாம்
மன்னுரை யாக மதித்தல் வேண்டும்.

ஜயசிங்கு : (தோன்றமல்லனை நோக்கி)

இந்நில ஆட்சியில் எனக்கும் அவர்க்கும்
என்னசம் பந்தம் இயம்புதற் குளது?
நல்லது தூதரே, நவாபு நம்பாற்
சொல்லச் சொன்னதைத் துலங்கச் சொன்மின்.

தோன்றமல்லன் : (ஜயசிங்கை நோக்கி)

அரசிறை பாக்கியை அட்டிசொல் லாமல்
விரைவி லனுப்ப வேண்டுமென் றுரைத்து
வாவென் றுரைத்தார் ; வந்தனன் அரசே.

ஜயசிங்கு: (தூதனை நோக்கி)

காவலன் கண்டது கனவோ? நினைவோ?
எந்தைநாள் தொடங்கி எவர்க்கும் அரசிறை
தந்த தில்லை ; தனியர சாட்சி
செய்து வந்தனர் செகத்தவர் அறிவார்.
கைதவ மிந்தக் கட்டுரை கூறுதல்.
புதியன புகுத்தப் புகன்ற வாசகம்
அதிசயந் தன்னை யடைவிக் கின்றது.

தோன்றமல்லன்: (ஜயசிங்கை நோக்கி)

அந்தநாள் ஆட்சி யகன்று விட்டது.
இந்தநாள் பரக்ஸியர் ஆட்சியென் றெண்ணுமின்.
பரக்ஸியர் கட்டளைப் படியே நவாபு
உரைத்த திதுவென் றுணர்க, மன்னவ.

ஜயசிங்கு : (தோன்றமல்லனை நோக்கி)

நல்லது தூதரே! நவின்ற வாசகம்
சொல்லுமின் அவர்பால்; சேனையோ டவர்வலி
காட்டி யரசிறை யீட்டச் சொன்மின்.

தோன்றமல்லன் : (ஜயசிங்கை நோக்கி)

அரசே, அருஞ்சினம் விரசமென் றறிமின்

ஜயசிங்கு : (தூதனை நோக்கி)

விரசமா? சரசமென்? விளம்புதி.

தூதர் :- அரசே, பொறுமின். அகல்வேன் விடையே.

மூன்றாம் களம்

இடம் : ஆர்க்காடு

காலம் : காலை

பாத்திரங்கள் : சைதுல்லாகான் தோன்றமல்லன் தாவுத்கான் முதலியவர்கள்.

சைதுல்லாகான் : (தோன்றமல்லனை நோக்கி)

நேரிசை யாசிரியப்பா

செஞ்சி வேந்தன் சயசிங் காற்றலும்
நெஞ்சக் கருத்தையும் நிகழ்த்துக.

தோன்றமல்லன் : (நவாபை நோக்கி)

நிருப,
வானவர் கோனிகர் மானவன் பெருமையும்,
ஆட்சியின் சிறப்பும் அறந்தவா நெறியும்,
மாட்சிமை சான்ற வரூதினி வலியும்,
சொல்லுத லரிதத் தோன்றலை எவரும்
வெல்லுத லென்பது வியன்கன வாகும்.
கூலிப் படையைக் கூட்டிப் போர்க்கெழல்
கேலிக் கூத்தாய்க் கெடுதல் திண்ணமாம்.
தூத னதலிற் றுகளறச் சொன்னேன்.
ஆதலி னரச, நீ ஆய்ந்து செய்க.

நவாபு : (தோன்றமல்லனை நோக்கி)

அண்ணலே யுரைத்த தனைத்தும் உண்மையே.
நண்ணலன் செயலை நாடுந் தோறும்
பரிந்தென் நெஞ்சம் பறையடிக் கின்றது.
விரிந்த படையுடன் வேந்தர் வந்தனர்.

ஆவது போரே, ஆதலின் போர்க்குப்
போவதற் குபாயம் புகலுக நண்ப.

தோன்றமல்லன் : (நவாபை நோக்கி)

வெற்றியும் தோல்வியும் விதியின் வசத்தது.
கொற்றவ, மற்றும் கூறுவ தென்னினி?
ஆயினும் உரைப்பன் : அநிகத் தலைவன்
மாயிரும் புகழான் மகபத் கானடற்
சிங்கவே றனையான் சென்றனன் றனது
மங்கல முடிப்பான் வழுதா வூர்க்கு.
வருவதற் கின்னுமோர் வார மாகும்.
விரைவி லின்னே வியன்படை கூட்டிச்
செஞ்சியை வளைதல் சீர்மைத் தாகும்.

சைதுல்லா : (தோன்றமல்லனை நோக்கி)

நெஞ்ச முவப்ப நிகழ்த்தினை நண்ப;
தானைத் தலைவன் றன்னொடும்
ஏனைய வேந்தொடும் எழுவமிப் பொழுதே.

[1714-ம் ஆண்டில் நவாபு சைதுல்லா கான் ஒரு பெரும் படையைத் திரட்டித் தாவுத்கானைப் படைத் தலைமையாகக் கொண்டு, ஏனைய பாளயப்பட்டார்களுடன் தானும் போர்க்கோலம் பூண்டு புறப்பட்டான். வழியில் வீரர்கள் உணவின்றி வருந்துகையில் திருவண்ணமலைப் பாளயப்பட்டு சுபாங்கன் கூறிய யோசனைப்படி சேனைவீரர்கள் கிராமங்கள்தோறும் கொள்ளையிடத் தொடங்கினார்கள். அவர்கள் கொள்ளையிட்டவரலாற்றினை ஓர் கிராமத்திலுள்ள கிருஷ்ண ரெட்டி, ரெங்க ரெட்டி என்ற இருவர், ஒருவர்க்கொருவர் பேசுகின்றனர்.

கிருஷ்ணன்: (ரெங்கனை நோக்கி)

நேரிசை யாசிரியப்பா

துருக்கர் படைகள் துரிதமாய் ஊரார்
வெருக்கொளப் புகுந்து வெருட்டினர் குடிகளை
ஆடை யணிகளை அள்ளிக் கொண்டனர்,
மாடுகன் றுகளை மடக்கினர் வீரர்;
அல்லா ஹூவென் றடித்தனர் சிலரை;
இல்லங் களையெரி யிட்டுக் கொளுத்தினர்;
ஆடவர் பெண்டிர் அலறி மாழ்கினர்;
ஓடிக் காட்டில் ஒளித்தனர் சிலவர்;
மக்களை யிழந்து மறுகி னார்சிலர்;
பொக்கிஷம் இழந்து புலம்பினர் பலரால்;
ஐதர் கலாப மாமிதென் றார்பலர்;
கைதவ மிதுவெனக் கதறினார் குடிகள்;
மனைவியைப் பிரிந்து வாடி னார்சிலர்;
தனையரை யிழந்து தவித்தனர் பலரால்;
தலைவனை யிழந்த தையலர் கோடி;
கலைபறி கொடுத்தவர் கணக்கிறந் தார்கள்;
கையொடிந் தவர்களும், காலிழந் தவர்களும்,
மெய்சிதைந் தவர்களும் வெள்ளக் கணக்கினர்;
இன்னணம், குடிகள் இரிந்து,
மன்னவன் வளநகர் வழிக் கொண்டார்களே.

[மாந்தர்கள் அனைவரும் செஞ்சி நகர் சென்று, மன்னவன் முன்பு முறையிட ஜயசிங்கு மன்னவன் விஷயமறிந்து, இற்றையிரவு நீவிர் யாவரும் இங்குத் தங்கி உணவுண்டிருங்கள். பொழுது புலர்ந்ததும், துருக்கன் படையைத் தொலைத்து, நீங்கள் இழந்த பொருட்கு இரு மடங்கு ஆர்க்காட்டிலிருந்து ஈடு செய்து கொடுக்கிறேன் என்று அவர்களுக்கு ஆறுதல் கூறினன்.]

நான்காம் களம்

இடம்: செஞ்சி

காலம்: காலை

பாத்திரங்கள்: ஜயசிங்கு மன்னவன், மந்திரி, முதலானவர்.

[ஜயசிங்கு மன்னவன் அன்றிரவு தனித்திருந்து ஆலோசனை செய்து, இவன் திமிரை அரை நொடியிலடக்கி விடுவோம். என்று தீர்மானித்துச் 'செஞ்சிக்கு 20-மைல் தூரமுள்ள வழுதாவூர்க்குத் திருமணம் முடிப்பான் சென்றிருக்கிற, தனது படைத்தலைவன் மகபத்கானை உடனே புறப்பட்டு வரும்படி விவரமாய் ஒரு கடிதம் எழுதி, இரண்டு குதிரை வீரர் வசம் கொடுத்தனுப்பினன்.]

[அவ்வீரர்கள் வழுதாவூர்க்கு, காலினுங் கடுகச் சென்று, படைத் தலைவனிடம் கடிதத்தைக் கொடுத்தார்கள்]

[மகபத்கான் திருமணம் இந்திர குமாரன் ஜயந்தன் மணம் போல எழில் பெற நடைபெறும்படி எல்லாச் சிறப்புகளும் கோடிக்கப்பட்டிருந்தன. பாவலர் காவலர்களுக்குப் பலபரிசுகளும் ஆதுலர்க்கு ஆடையும், அன்னமும் வழங்கப்பட்டன. மணமகன் மஞ்சனமாடி, மஞ்சள்பட்டாடை யுடுத்து, அணிகள் பூண்டிருந்தனன். மணமகள் பாங்கிகளால் அலங்கரிக்கப்பட்டனள். மணநாள் வெகு

குறுகலத்துடன் விளங்கியது. அவ்வ மயம் பூசை வேளையில் கரடி புகுந்தது போல் அரசன் அனுப்பிய கடிதம் வந்தது. மகபத்கான் கடிதத்தைப் பிரித்துப் பார்த்து, புன்னகை புரிந்து, மணப் பந்தரில் குழுமியிருந்த பந்துமித்ரர்களைப் பார்த்துக்கூறுகின்றான்.]

மகபத்கான் : (மணப்பந்தரில் கூடியிருந்த அனைவரையும் நோக்கி)

நேரிசை யாசிரியப்பா

என்மணம் காண்பான் இன்புடன் வந்த
அன்புமிக் குடையீர் அனைவருங் கேண்மின் :
ஆர்க்காட் டரசன் ஆட்பெரும் படையுடன்
போர்ப்பெருங் கோலம் பூண்டு வந்து
செஞ்சியை வளைந்த செய்தியிக் கடிதம் ;
மனிதர் வகுத்த வழிப்படி யாகுமோ ?
நினைப்ப தொன்று விளைவது வேறாம்.
ஆண்டவன் திருவிளை யாடல் அறிவில்
மாண்டமா தவரும் வகுக்க வல்லரோ ?
ஆதலின் அரசன் ஆணையின் படியான்
போதல் கருதினன் ; பொழுது புலருமுன்
செஞ்சி மாநகரம் சேர்தல் வேண்டும்.
வஞ்சி சூடி வாகையைப் புனைந்து
போரினை முடித்துப் புகழினைப் பூண்டபின்
நாருடன் மன்றலில் நாரிகை சூட்டும்
தாரினைத் தரித்தல் வீரியர்க் கழகாம்.
விடையெனக் கருண்மின் ;

மாந்தர்கள் : (மணமகனை நோக்கி)

வீரநீ செல்க.

அன்னை : (மகனை நோக்கி)

இடையிராத் தங்கி எழில்மணம் முடித்துச்
செல்லுதல் சிறப்பாம் செல்வனே,

மகன் : (தாயை நோக்கி)

அன்னையே,
புல்லிய பகைவன் பொறுத்திருப் பானோ?
சொல்லுக.

அன்னை : (மகனை நோக்கி)

நல்லது! தோன்றலே,
வெல்லுக, பகைவனைக் கல்லிடை நாட்டியே.

[மகபத்கான் அங்குள்ளார் அனைவரிடத்தி லும் விடைபெற்று, நீலவேணிக் குதிரை யேறிப்பொழுது விடிவதற்குள்ளாகச் செஞ்சிநகர் வந்து அரசனைக் கண்டு வணங்கிநின்றனன். மன்னவன் அவன் வரவைக் கண்டு மகிழ்ந்து, அவனுடன் ஆலோசனை செய்து, பின்னர்த் தான் போருக்குப் பிரயாணமாகித் தங்கள் குலதெய்வமாகிய அரங்கநாதன் ஆல யம் புக்குப் பாந்தட்பள்ளியில் பள்ளி கொண்டிருக்கும் பரந்தாமனைத் துதிக் கின்றான்.]

ஜயசிங்கு : (அரங்கனை நோக்கி)

விருத்தம்

மன்னவன் தயரதன் மைந்தனே போற்றி!
தென்னக ரிலங்கைத் தீயவன் கண்ணன்
சென்னியோர் பத்தையும் செற்றவா போற்றி!
என்னக ரரங்கா விரங்காய் போற்றி!

[என்று மன்னவன் அரங்கனைத்துதித்து, மெய்ம்மயிர் பொடிப்ப, விதிர்விதிர்ப் பெய்திக் கண்ணீர்சொரிந்து, சந்நிதியில் நிற்கையில் அரங்கநாதர், தன்மேல் சாத்தப்பட்டிருந்த திருத்துழாய் மாலையைக் கருக்கித் துர்நாற்றம் உண்டு பண்ணி, மன்னவனுக்குப் பின்வருங் கெடுதியைக் குறிப்பாகக் காட்டினர். அது கண்ட மன்னவன் கடவுளைத் தொழுது நானே இப்போரை வேண்டுமென்று தேடிக் கொள்ளவில்லை. பகைவன் வலுவில் வந்து கோட்டையை வளைத்துக் கொண்டிருக்கும்போது— வீரன் கோட்டைக்குள் பதுங்கியிருப்பது நியாயமாகுமா? என் கடன் பணி செய்து கிடப்பது. நின் கடன் அடியேனைத் தாங்குதல் என்று சொல்லி விட்டுப் போர்க்கோலத்துடன் மனைவியிருக்கும் அந்தப்புரஞ் சென்றனன்.)

[மனைவி பத்மினிபாய் பூப்படைந்த நாள் குற்றமானதால் சின்னாள் வரையிலும், கணவனும் மனைவியும், ஒருவர்க்கொருவர் பார்க்கப்படாதென்ற, நிபந்தனை ஏற்பட்டிருந்தது. இடையில் சந்தித்துப் பேசவேண்டிருப்பின், திரைமறைவிலிருந்து பேசுவது வழக்கம். அரசன் அந்தப்புரம் வந்ததும், அவ்வழக்கப்படி அன்றும் செவிலித்தாயாரால் குறுக்கே திரையிடப்பட்டிருந்தது. திரையின் அகத்தும், புறத்தும், பத்மினியும் மன்னவனும் மூறையே வந்து அமர்ந்தனர். பத்மினி, ஜயசிங்கு இருவர்க்கும் சம்பாஷணை.]

மனைவி: (கணவனை நோக்கி)

நேரிசை யாசிரியப்பா

நாத வருக, நண்ணலார் படைகள்
ஏது வின்றி எதிர்ந்த தறிந்தேன்.
காரொலி போற்பறை கறங்கப் படையெழுப்
போர்க் கோலத்தைப் பூண்டனிர் போலும்!
தன்வினை தன்னிலும் தானை காவலன்
மன்வினை பெரிதா மதித்து வந்தது
வியப்பே யாகும் வேந்தர் வேந்தே!

கணவன்: (மனைவியை நோக்கி)

வயப்புலி மான்வரின் வாளா விருக்குமோ?
தாரம் பெரிதா வீரம் பெரிதா?
வீரமே பெரிதென விரைந்து வந்தனன்.
நங்கையர் திலகமே, நண்ணலார் படைக்கடல்
வங்கமாக் கடந்து வருவேன் விடைதா.

மனைவி: (கணவனை நோக்கி)

இற்றைப் பொழுதே வெற்றியை நிறுத்துமின்
பகைவரைக் கல்லிடைப் படுத்துமின்
பகவன் துணையடி பற்றிச் சென்மினே.

[மனைவியிடத்தில் விடைபெற்றுத் திரும்பிய மன்னவன், கடவுள் காட்டிய அவலக் குறிப்பும், மனைவியின் சொற்குறிப்பும் தனக்குத் தீயசகுனமா யிருப்பினும் வீரனுதலின் அவற்றைப் பொருட்படுத்தாமல், தானைத் தலைவனுடன் போர்க்கோலத்துடன் கோட்டையின் புறத்தே வந்து, எதிரியின் சேனைக் கடலிற் புகுந்தான்.]

ஐந்தாம் அங்கம்

முதற் களம்

இடம் : செஞ்சிக்கோட்டை வாயில்

காலம் : காலை

பாத்திரங்கள் : ஜயசிங்கு, மாவுத்கான், சேனை வீரர்கள்.

சேனைவீரர் : (ஜயசிங்கை நோக்கி)

நேரிசை யாசிரியப்பா

வெற்றி வேற்கை வேந்தன் வெல்க.
கொற்றவன் வாழ்க; பற்றலர் ஒழிக.

ஜயசிங்கு : (வீரர்களை நோக்கி)

செஞ்சித் தாயின் செல்வப் புதல்வரே,
விஞ்சிய புகழ்சால் வீரரே கேண்மின்,
வீரமே கவசம், ஆரமே வாகை,
தாரமே கொற்றத் தலைவி, வீரர்க்கு
'உறங்கு வதுபோற் சாக்கா டுறங்கி
விழிப்பது பிறப்பென' விளம்பினர் பெரியார்.
ஊனமே யான உடலினைத் துறந்து
மானமா னையார் மதிப்பர் பூணென.
வெல்லுதல் போரில் விடுதல் உயிரை
எல்லையில் புகழை இரண்டும் ஈயுமால்.
வீரரே, யுங்கள் வீரம் விளங்க
போரை நடாத்திப் புகழ்பெறு வீரால்.

5

வீரர்கள் (அரசனை நோக்கி)

அடலரி யேறும் அரசே, எங்கள்
உடல்பொருள் ஆவி உமவே
திடமுடன் பகையைச் செகுத்திடு வேமால்.

[என்று கூறி வீரர்கள் போர்க்குத் தயா ராயினர்.]

[சேனைத்தலைவன் மாவுத்கான் ஜயசிங்கு மன்னவனை நோக்கிக் கூறுகிறான்.]

மகபத்கான் (மன்னவனை நோக்கி)

நேரிசை யாசிரியப்பா

மானையோர் பொருட்டாய் மதித்து, வேங்கை
தானெழுந் தாற்போல் சைதுல் லாகான்
தன்னுடன் போர்க்குத் தாமெழல் தகுமோ ?
என்னே யிவன்படை ! என்னே யிவன்வலி !
இன்னே யிவனைவிண் ணேற்றி வருவேன்.
மன்னவர் பெரும, மதித்தெனக் குத்தரம்
தந்தருள் அரசே.

மன்னவன் (மாவுத்கானை நோக்கி)

தானைத் தலைவனே,
தந்தியின் கடலைச் சிந்துஞ் சிங்கமே,
மாற்றவர் படையிலுன் வான்வலி தோள்வலி
ஆற்றலுங் கண்டுநின் னருகி லிருப்பின்,
ஊக்க மளிக்கும் ஒன்னலர் ஒடுங்குவர்.
ஆக்கை யுயிரை யகன்றெவ ணிருக்கும் ?
ஆதலின், நின்னுடன் போதல் எண்ணினன்.

[என்று கூறி]

யானை குதிரை யாட்படை முன்செலத்
தானைத் தலைவன் தன்னுடன் மன்னவன்
சங்கரா பரணியைச் சார்ந்தனன்
அங்கதன் பெருக்கை யாய்ந்துநின் றனனால்.

[சைதுல்லாகான் ஆலோசனை செய்கிருன்.]

[மகபத்கான் மணத்தைவிட்டு விரைவில் வருவான் என்றும், ஜயசிங்கு மன்னவன் இவ்வள்வு துரிதமாய்ப் போர்க்கு எழுவான் என்றும், சைதுல்லா சிந்திக்கவேயில்லை. நம்முடைய சேனையை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்குள்ளாக, இருவரும் போர்க்கு ஒருங்குசேர்ந்து வந்துவிட்டனரே, இனி என் செய்வதென்று ஆலோசிக்கையில்,திருவண்ணமலைப் பாளயப்பட்டு சுபாங்கன், சமீபத்திலிருக்கும், தாழனூர், மலையனூர் என்ற கிராமங்களிலுள்ள ஏரிகள் புனல் நிரம்பி வழிகின்றது. அந்த ஏரிகளின் கரையை யுடைத்துவிட்டால், அப்புனல் சங்கராபரணி யாற்றில் பெருகி எதிரிகளின் வரவைச் சற்றுத் தடைப்படுத்தும். அதற்குள் நம் சேனையை ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம் என்று கூறிய யோசனைப்படியே நவாபு அந்த ஏரிகளின் கரையை உடைத்துவிடும்படி தனது ஆட்களுக்குக் கட்டளை யிட்டான். ஜயசிங்கு மன்னவன் இதை ஒற்றர்களாலறிந்து கோபாவேசமுற்றவனாய், வெள்ளம் வடிந்தபின் வரும்படி தன் சேனையிலுள்ள ஏனைப் படைவீரர்களுக்குக் கட்டளையிட்டு, தானைத் தலைவனும், மற்றுமுள்ள ஐந்நூறு குதிரை வீரர்களும் தன்னுடன் வர, தனது ஆற்றலுள்ள அசுவத்தைக்கொண்டு ஆற்றைக் கடந்து அக்கரை சேர்ந்தான்.]

இரண்டாம் களம்

இடம்: போர்க்களம்
காலம்: நண்பகல்
பாத்திரங்கள்: மாவுத்கான், சேனு வீரர்

[மகபத்கான் போர்த்திறத்தைப் பற்றிச் செஞ்சிநகர் சேனையிலுள்ள காலாட்களில் நீலன், தாரன் என்ற இரண்டு போர்வீரர்கள் ஒருவர்க்கொருவர் பேசுகின்றனர்.]

நீலன்: (தாரனை நோக்கிக் கூறுகிறுன்.)

நேரிசை யாசிரியப்பா

மாண்புகழ் படைத்த வாண்சிங் கம்போல்
தானைத் தலைவன் யானைப் படையில்
புகுந்தனன் வாளால், போழ்ந்தனன் வீரரை.
மிகுந்திறல் நீல வேணிமே லிருந்து
கரிகளைப் பரிகளைக் காலாட் படைகளை
இருகூ றுக வெறிந்தனன் வாளால்.
வேலனே? விற்போர் விசயனே? உயிர்கவர்
காலனே? யிவனெனக் கலங்கினர் பகைவர்.
கரங்களைக் கால்களைக் காவலர் மகுடச்
சிரங்களை வாளால் செருக்களம் வீழ்த்தினன்.
எங்கெங் கேயென் றெதிர்ந்த வீரரை
அங்கங் கேசென் றவருயி ரகற்றினன்.
காலிழந் தழிந்த கரிகள் கணக்கில ;
வாலிழந் துருண்ட வாம்பரி பலவால் ;

மாவுத் கான்போர் வல்லமை கண்டு
தாவுத் கான்மனந் தளர்ச்சி யடைந்தான்.

தாரன்: (நீலனை நோக்கி)

நல்லது நண்ப, நண்ணலார் தங்கட்
கெல்லையில் சூழ்ச்சி யியம்பிய சுபாங்கன்
கடகளிற் றில்வரக் கண்டுமா வுத்கான்
அடலரி யேறென அவன்பால் பாய்ந்த
செயலினைச் சிறிது செப்புக,

நீலன்: (தாரனை நோக்கி)

சிங்கம்!

கயவாய்த் துதிக்கைக் களிறு பிளிற
மத்தகம் வாவுதல் மானமா வுத்கான்
தத்திப் பாய்ந்து தரியலன் சுபாங்கன்
வலக்கையை வாளால் நிலத்திடை வீழ்த்தினன்.
இடக்கரத் தாற்சலா மிட்டுயிர் ஏற்க
நடைப்பிணம் ஒப்பாய், நஞ்சம் போல்வாய்,
மான மழிந்தபின் வாழ நினைந்தாய்,
ஆனதா லகல்கவென் றறைந்தினிப் பொருதற்
கேதிலா ரெவரும் போதல் இலரென
மன்னனைக் காண்பான் வருகையில், மறைவாய்த்
துன்மதித் துரோகிதா வுத்கான் சுட்டனன்;
பட்டது குண்டு; பார்மிசை வீழ்ந்தான்.
கெட்டது சேனை, கிளர்ந்த தோதை,
சங்க மூதித், தாவுத் கானும்
சிங்க நாதஞ் செய்தே
தங்க ளரசனைச் சார்ந்தனன் மாதோ.

[தாவுத்கான் தந்திரமாய் மகபத்கானைக்
கொன்றதைக்கொண்டு, அவன் படை

வீரர் ஆர்த்தனர். நவாப்பு சைதுல்லா கான் தாவுத்கானுக்குப் பொற்பதக்கம் ஒன்று பரிசளித்தனன். இஃதிப்படி யிருக்க, ஜயசிங்கு மன்னவன் மாவுத் கான் பகைவனால் வஞ்சகமாய்க் கொல்லப்பட்டதை ஒற்றர்களாலறிந்து, கோபாவேசங் கொண்டனன். ஏற்றஞ் சாலாணியாணி யெதிர் செலக்கடாயது போல, வீரனுதலின், மாவுத்கான் இறந்ததினுல் உண்டாகிய சோகம், எதிரிகளின் மேல் தனக்குண்டான கோபத்தால், ஒருவாறு தணியப் பெற்ற வனுய், மகபத்கானையும் அவனது நீல வேணிக் குதிரையையும் அடக்கம் செய்ய ஏற்பாடு செய்துவிட்டு, இரணி யனை வதைக்கத் தோன்றிய, நரசிங்க மூர்த்தியையும், புரஞ்சுடச் சென்ற பரஞ் சுடரைப் போலவும், ராஜா ஜயசிங்கு கோபாவேசங் கொண்டு, வாளையும், கேடயத்தையும் கையில் வாங்கிப் பஞ்ச கல்யாணிப் பரிமீதிவர்ந்து, தாவுத்கானை யும், சைதுல்லாகானையும் சித்திரவதை செய்ய, எதிரியின் சேனைக் கடலைச் சின்ன பின்னமாகப் பிளந்துகொண்டு சென்றான்.]

மூன்றாம் களம்

இடம்: போர்க்களம்
காலம்: ஏற்பாடு
பாத்திரங்கள்: ஜயசிங்கு மன்னவன், சேனை வீரர்கள்.

[ஜயசிங்கு மன்னவன்பால் பரிசுபெறும் பொருட்டுச் செஞ்சிமா நகர்க்குச் சேர நாட்டு ஆசுகவிப் புலவன் ஒருவன் தற் செயலாய் வந்தான். அவ்வமயம் அங்குப் போர் தொடங்கிவிட்டது. அப் போரைக் கண்ணுற்ற ஆசுகவிப் புலவன், ஜயசிங்கு மன்னவன் போர்க் களத்திற் காட்டிய வீரச் செயலையும், போர்க்கள வரலாற்றினையும், செஞ்சி நகர் சம்ஸ்தான வித்வானாகிய மதுர கவியினிடத்தில் விரித்துக் கூறுகிறான்.]

ஆசுகவி: (மதுரகவியை நோக்கி)

நேரிசை ஆசிரியப்பா

சொன்னயம் பொருணயம் தொடைநயம் நடைநயம்
பன்னய மும்படப் பாடும் புலவீர்,
மன்னவன் பொற்றோள் மந்தர மலையால்
ஒன்னலர் சேனையின் ஒருகடல் கடைந்து,
வெற்றித் திருவை வியன்புயம் அணிந்தான்.
பற்றலர் உடல்களைப் பருந்துக் கீந்தான்;
போர்க்களம் குருதிப் புணரி யாக்கினன்;
தார்த்தனி வீரன் தாவுத் கானைப்.

பார்த்தனன் ; அவன்பால் பரியைத் தூண்டினன் ;
வஞ்சகன் தலையை வாளால் அறுத்தான் ;
எஞ்சினின் றார்களை யிருகூ றாக்கினன்.
கைதவக் கொடியன் சைதுல் லாவை
நாடிக் களத்தில் தேடித் திரிந்தனன் ;
வீரர் தலைகளை வெட்டி வீழ்த்தினன்.
போர்க்களம் பந்தரிற் போர்த்தன பறவைகள் ;
அற்ற தலையை அங்கையி லேந்திச்
சற்றுநின் றாடிச் சாய்ந்தன கவந்தம்.
பரிதிவான் செக்கரிற் படிந்த படுகளக்
குருதியிற் காளி குளித்துநின் றாடினள்.
பொன்றினா ருயிர்களைப் புகுந்தெடுத் துப்போய்த்
தென்றிசை நமனுந் 'தெனதெனா' என்றனன்.
மாய்ந்து போன மக்கள் யாக்கையைப்
பேயும் நாயும் பிச்சுத் தின்றன.
சிங்கவே றஞ்சய சிங்கு மன்னவன்
துங்கத் தூணர சிங்கமாய்த் தோன்றினன்.
இன்னவா றம்போர்க் களத்தி னியல்பு
மன்னவன் தோள்வலி வாள்வலி தன்னைப்
பன்னி யுரைத்திடப் பன்னூ வேண்டும்.
பஃறலை கொண்டிப் படிதாங் கரவும்
புகல வொண்ணுமோ ? புலவர் திலகமே !

மதுரகவி : (ஆசுகவியை நோக்கி)

துன்னலன் சைய துல்லா செய்தியும்
பின்னவன் நடந்த பெற்றியும் பேசுதிர் !

ஆசுகவி : (மதுரகவியை நோக்கி)

நல்லது முத்தமிழ் நாவல ரேறே,
எல்லையில் புகழ்சால் இறைவன்

வல்லமை யாவும் வகுத்துரைப் பேனே

[நவாபு சைதுல்லாகான் மனக் கலக்க மடைந்து, நமது படைத் தலைவனே மாண்டுபோய்விட்டான். இனி நாம் தப்புவதற்கு வழியில்லையென்று நினைத்து, சண்டையை நிறுத்திச் சமாதானத்தை நாடுதல் நலமெனக் கருதி, தான் சமாதானத்தை விரும்புவதாகவும், இதுவரையில் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்து கொடுப்பதாகவும், இனித் தங்களிடமிருந்து வரிவசூல் செய்வதில்லையென்பதையும், மன்னவன் பாற் சென்று தெரிவித்து வரும்படி, தோன்ற மல்லனைத் தூது விடுத்தனன். அவனும் ஆர்க்காட்டரசன் கட்டளையை மேற்கொண்டு வெள்ளைக் கொடி பிடித்துக் வந்து ஜயசிங்கு மன்னவனை வணங்கி நின்றனன்.]

ஜயசிங்கு: (தூதனை நோக்கி)

நேரிசை யாசிரியப்பா

இங்கு வந்தவா றியம்புக, தூத.

தூதன்: (அரசனை நோக்கி)

துங்கவா ளேந்திய தோன்றலே, எங்கள்
தலைவன் விரும்பினன் சமாதா னத்தை.
நிலவரி வாங்க நினைந்திலன், நஷ்ட
ஈடு தரவும் இசைந்தனன், ஆதலின்,
ஆடவர் திலகனே, அமரினை நிறுத்த
வேண்டு மென்று விளம்பிவா வென்றனன்
ஆண்டகை அருளை அறிய வந்தனன்.

ஜயசிங்கு: (தூதனை நோக்கி)

நஷ்ட வீடென் இஷ்டனைத் தருமோ?
துஷ்டனைத் தொலைப்பான் துணிந்து நின்றனன்.
வீர மன்று விளம்பிய வார்த்தை
போர்க்களங் குறுகப் புகலுதி!

தூதன்: அரசனை (நோக்கி)

பொறையே,
மன்னவர்க் கழகென வழங்குவர்
என்னினி யுரைப்ப திறைவ? விடையே.

[என்று கூறித் தோன்றமல்லன் மீண்டு சென்று, தான் மன்னவன்பால் தூது போய் வந்த வரலாற்றினை நவாபு சைதுல்லாகானிடம் தெரிவித்தான்.]

[ஆர்க்காட்டரசன் நவாபு நாம் போர் முனைக்குச் சென்றால், நமக்கு ஒரு பொழுதும் வெற்றி ஏற்படாது. நம்மை எதிரி நமனுலகுக்கு அனுப்பிவிடுவான். ஆகையால் நாம் எப்படியாவது தப்பி யோட வழி தேடவேண்டுமெனத் தீர் மானித்து, தன் படையிலுள்ள ஓர் போர் வீரனை அழைத்து, தன் உடை களை அவன் அணியும்படி செய்து, அவனைத் தன்னைப்போலாக்கி, செய் தியை ஒருவர்க்கும் தெரிவிக்காமல் இருக்கும்படி அவனுக்கு உணர்த்தி, போர்க்களம் செல்லும்படி அவனை அனுப்பிவிட்டு, தன்னைப் பிறர் அறியா வண்ணம், அவன் உடைகளைத் தான் பூண்டு, தலை மறைவாக ஓடி, ஒருபால் ஒளித்திருந்தான். பின்னர் அவன் படை வீரர் ஒருங்கு திரண்டு போர்க்களங் குறுகிப் போர் தொடங்கினர்.]

ஆசுகவி : (மதுர்கவியை நோக்கி)

நேரிசை யாசிரியப்பா

செஞ்சி வேந்தன் சயசிங் கென்பவன்
வஞ்சகன் படைகள் வருதலை நோக்கிக்
கேடயம் வாளும் கிளர்பட வேந்தி
ஆடற் பரிமேல் அமர்க்களம் புகுந்தான்.
வாளை யோச்சி வயவர்தம் சிரமும்
தோளையும் தாளையும் துணிபடத் துணித்தான்.
எல்லாத் திசையும் இரிந்தோ டினர்சிலர்.
அல்லா ஹூவென் றலறிவீழ்ந் தார்பலர்.
குருதியைக் குங்குமக் குறியாச் சாத்தி
அரி! அரி! அடைக்கலம் அருளென் றார்சிலர்.
சேனைகள் திசைதொறுஞ் சிதறியோடின.
ஆனைமேற் போலியாம் ஆர்க்காட் டரசனைக்
கண்டனன் வீரன் கொண்டனன் கோபம்.
துண்ட மாக்கினன் தோளினை வாளால்.

[அப்பொழுது போலி நவாபு ஜயசிங்கு
மன்னவனை நோக்கிக் கூறுகிறான்,]

போலி வீரன் : (அரசனை நோக்கி)

அய்யனே, ஆர்க்காட் டரசனல் லேன்யான்.
பொய்வே டத்தைப் பூட்டிப் போர்க்கெனைப்
போகவிட் டன்னவன் போயின னோர்பால்.
ஈகவென் னுயிரை இறைவனே,

ஜயசிங்கு : (போலிவீரனை நோக்கி)

வேடம்

தந்ததோர் விளைவீது தான்; மா ரீசன்
அந்தநாள் மானாய் அகன்றன னாருயிர்;
இந்தநாள் இன்னுயிர் ஈந்தனன் ஏற்றுச்

சிந்தை திகைப்பறச் செல்கெனச் செப்பிய
மன்னவன் கருணையை மதிப்பிட்
டென்னென் றுரைப்பேன் இன் கவி வாணரே.

[என்று ஆசுககவி மதுரகவியினிடம் இறைவன் வாகையை எடுத்துரைத்துக் கொண்டிருக்கையில், ஜயசிங்கு மன்னவன் தனித்திருந்து ஆலோசிக்கிறான் நவாபு சைதுல்லாவோ புறங்காட்டியோடி யொளித்துக்கொண்டான். போருக்கு வருவோர் ஒருவரையும் காணோம். நண்பனோ இறந்துவிட்டான். நண்பனைப் பிரிந்து நாடாள்வதில் பயனென்ன. "நீரில் குமிழி இளமை, நிறை செல்வம், நீரிலெழுத்தாகும்" என்றார் பெரியார். ஆகையால் உலக வாழ்க்கையைத் துறந்து, பரமபதம் செல்வதே உத்தமமெனக் கருதி, பக்கத்திருந்த பஞ்சகல்யாணியைப் பார்த்தான். அப்பரியும் மண்டியிட்டு மன்னவனை வணங்கி நின்றது. அதை வாளால் வெட்டி, தற்போதமிழந்து, பரபோத மேலிட்டவனாய், ஈஷணாத்ரயங்களை யொழித்து, அழியா வீட்டை அடைய எண்ணிப் பரந்தாமனைத் துதிப்பானாயினான்.]

[ஜயசிங்கு மன்னவன் கடவுளைத் துதிக்கின்ற விவரத்தை ஆசுகவி, மதுரகவியிடம் விவரித்துக் கூறுகிறான்.]

ஜயசிங்கு : (கடவுளை நோக்கி)

போற்றித் திருவகவல்

மூலமே யென்ற மும்மதக் கரிமுன்
நீலமே கம்போல் நின்றாய் போற்றி!

இரணியற் கொன்றவ னீன்றபா லகற்கோர்
அரணிய னுயருள் அரியே போற்றி!
வஞ்சபூ தனையை வதைத்து மாமனுங்
கஞ்சனைக் காய்ந்த கண்ணனே போற்றி!
கிளர்மழை தடுக்கக் கிரியொன் றேந்திய
துளவத் தாரணி தோன்றலே போற்றி!
பற்பல ஆடைகள் பாஞ்சா லிக்குப்
பொற்புடன் அளித்தருள் புண்ணியா போற்றி!
யாதவ குலஞ்செய் மாதவத் தால்வரு
மாதவ னேமணி வண்ணா போற்றி!
தேவர் துயரம் தீர்த்திட அயோத்தியில்
மூவரு மொன்றாய் முளைத்தாய் போற்றி!
கோசிகன் கூறக் குனிசிலை யெடுத்து
மாசினத் தாடகை மாளவம் பெய்து
வாள்வலி யரக்கரை வதைத்து மாதவன்
வேள்வியைக் காத்தபோர் வில்லியே போற்றி!
சிலைமா தாக்கிய சேவகா, சிலையைக்
குலைத்துச் சனகியைக் கொண்டவா போற்றி!
பரசு-ராமனைப் பங்கஞ் செய்தவன்
தரத்தவங் கொண்டகோ தண்டனே போற்றி!
அன்னைதன் திருமொழி சென்னியிற் சூடித்
தம்பியுந் தையலுந் தன்னுடன் வரவே
கம்புசேர் கரத்திற் கார்முகந் தாங்கிச்
சித்திர கூடஞ் சென்றவா போற்றி!
அத்திரி யாதி அகத்தியர்க் கண்டு
விஞ்சையைப் பெற்றுப் பஞ்ச வடியில்
வஞ்சியோ டிருந்த மாதவா போற்றி!
வஞ்சமா ரீசனை வாளியால் வதைத்து
வஞ்சியைத் தேடி வருகையிற் கொடிய
விராதன் கவந்தன் கராதியர்க் கொன்றேழ்
மராமரந் துளைத்து வாலியைப் படுத்துச்

சுக்கிரீ வர்க்குச் சுடர்முடி சூட்டிய
கைக்கிரி யனையபோர்க் காளையே போற்றி!
ஆழியோ டனுமனை யனுப்பிச் சனகி
வாழ்விடந் தெரிந்து மகிழ்ந்தவா போற்றி!
இராவணன் றம்பியோ டிராவணஞ் செற்றவா,
சீதையை மீட்டசெஞ் சேவகா, போற்றி!
விலங்கல் வலியுடை வீடணப் பெருமாற்
கிலங்கையில் மவுலி யீந்தவா போற்றி!
மாதவர் வானவர் வாழ்த்திட வயோத்தியில்
போந்து மகுடம் புனைந்தவா போற்றி!
ஏந்தலே போற்றி! இறைவனே போற்றி!
சாந்தனே போற்றி! தயாபர போற்றி!

ஆசுகவி : (மதுரகவியை நோக்கி)

என்று தொழுதுகை யேந்திய வாளால்
தன்னைத் தானே தடிந்துயிர் துறந்தான்
இந்தமா நிலத்தில் இவன் புகழ்
செந்தமிழ்ச் செல்வரே செப்ப வொண்ணுமோ?

மதுரகவி : (ஆசுகவியை நோக்கி)

நேரிசை யாசிரியப்பா

மன்னவன் வீரமும் வாகையும் கருணையும்
இன்னிசைப் பாவால் இசைத்தீர், புலவரே.
அன்னவன் இருந்தால் அருளுறும்
இன்கவித் திறனையார் இயம்ப வல்லரே?

[ஜயசிங்கு கடவுளைத் தொழுது, வாளால் தன்னைத்தானே குத்திக்கொண்டிறந் தான், வானவர் மலர் மாரி பொழிய மன்னவன் விமானம் ஏறிப் பரமபதஞ் சேர்ந்தான். இச்செய்தி நகரமெங்கும் பரவியது.]

நான்காம் களம்

இடம் : செஞ்சி

காலம் : காலை

பாத்திரங்கள் : ராணி - நகர மாந்தர்கள்

[அந்நகரிலுள்ள நண்பர்களில் இருவரில் சித்திரசேனன் என்பவன் சித்திராங்கதனை நோக்கி, போர்க்கள முடிவையும், பின்பு நகரில் நடந்த வரலாற்றினையும் கூறுக என்று கேட்க சித்திராங்கதன் கூறுகிறான்.]

சித்திராங்கதன் : (சித்திரசேனனை நோக்கி)

நேரிசை யாசிரியப்பா

மன்னவன் களத்தில் மாண்டதை யறிந்த
அந்நகர் ஆடவர் ஆவியைப் போக்கிப்
பொன்னகர் புக்கனர்; பூங்கொடி யார்பலர்
வன்னியிற் குதித்து வாழ்வினைத் துறந்தார்.
கற்பினுக் கருந்ததி பொற்பினுக் கணியாம்
அரசி பத்மினி அவல மடைந்து
அரசே! நாதா! ஆருயி ரேயென்
றுரைசெய் துயிரை யொழித்தனள்; ஊரார்
கரையிலாத் துன்பக் கடலில் ஆழ்ந்தனர்.
செஞ்சிமா நகரஞ் சீரழிந் திட்டது.
எஞ்சிய தென்னினி யிசைத்திடற் கிருப்பது?
நண்ப, நகர்நிலை நாடிப்
பண்படு சொல்லால் பகர வொண்ணுமோ?

ஐந்தாம் களம்

இடம் : ஆர்க்காடு

காலம் : காலை

பாத்திரங்கள் : நவாபு சைதுல்லாகான்

அமைச்சர் - முதலானோர்.

[பின்னர்ச் செஞ்சியில் நிகழ்ந்த நிகழ்ச்சி
யைக் கூறுக என்று சித்திரசேனன்
கேட்கச் சித்திராங்கதன் கூறுகிறான்.]

சித்திராங்கதன் : (சித்திரசேனனை நோக்கி)

நேரிசை யாசிரியப்பா

மன்சய சிங்கு மரணமு மன்னவன்
பன்னியாம் பத்மினி பட்டதும், பதியுளோர்
துஞ்சிய துஞ்சை துல்லா கேட்டு
நெஞ்சந் தளர்ந்துயிர் நீத்தவர் தம்மைச்
சீர்பெற வடக்கம் செய்வித் தரசியின்
பேரால் ராணிப் பேட்டையென் றோரூர்
நிலவச் செய்தே நீணகர் செஞ்சித்
தலத்தை நவாபு தன்வசம்
குலவச் செய்துசெங் கோல்கொண் டானரோ.

ஜெயசிங்கு நாடகம் முற்றுப்பெற்றது

மதுரகவி : (வாழ்த்து)

கலிவிருத்தம்

வாழ்க, வானவர் மானவ ரேனையர்.
வாழ்க, மாதமும் மாரி வழங்குக.
வாழ்க, நல்லறம் ; மன்னவ ரோங்குக.
வாழ்க, இந்நூல் ; படிப்பவர் வாழ்கவே.

அருஞ்சொற்பொருள் அகரமுதல் .

அ

அக்காரம்	=	சருக்கரை
அகழி	=	கிடங்கு
அட்டி	=	தடை
அட்டமங்கலம்	=	குதிரையின் எட்டுறுப்பில் வெண்மை நிறமிருத்தல்
அடிசில்	=	உண்பன, தின்பன, நக்குவன, பருகுவனவாகிய உணவு
அரசிறை	=	அரசர்க்கிறுக்கும் கடமை
அரணியன்	=	காப்பாற்றுவோன்
அரி	=	சிங்கம், பகைவன், திருமால் குரங்கு, இந்திரன்
அருத்தி	=	ஆசை, உண்பித்து
அவலம்	=	துன்பம்
அற்ற	=	அற்றுப்போன
அறத்தாறு	=	அறவழி

ஆ

ஆக்கை	=	உடம்பு
ஆசறு	=	குற்றம் அற்ற
ஆதுலர்	=	ஏழைகள்
ஆவணம்	=	கடை
ஆர்கலி	=	கடல்
ஆழி	=	மோதிரம்

இ

இசை	=	கீர்த்தி
இஞ்சி	=	மதில்
இடக்கு	=	இடக்குச் செய்தல்
இடர்	=	துன்பம்
இயம்புவது	=	சொல்வது
இராவணம்	=	இராமல்
இரிந்து	=	ஓடி
இலைக்கலம்	=	இலையாலான உண்கலம்
இறை	=	இறைவன், கடவுள், அரசிறை

ஈ

ஈட்ட	=	சம்பாதிக்க

உ

உகந்து	=	விரும்பி
உச்சைச்சிரவம்	=	இந்திரன் வெள்ளைக்குதிரை

ஊ

ஊனம்	=	குறைவு

எ

எந்தை	=	என் தந்தை
எய்தினன்	=	அடைந்தான்
எல்லையில்	=	எல்லையில்லாத
எழில்	=	அழகு
எறும்வலி	=	மிக்க வலிமை

ஏ

ஏந்தல்	=	அரசன்
ஏத்தி	=	துதித்து
ஏது	=	காரணம்
ஏறு	=	விலங்குகளில் வலியுள்ளது

ஒ

ஒல்லையில் = விரைவில்

ஓ

ஓதம் = குளிர்ச்சி
ஓதனம் = சோறு
ஓதை = ஓசை

க

கடம் = மதநீர், காடு
கணை = அம்பு
கரம் = கை, கிரணம், கப்பம்
கமுகு = பாக்கு
கரி = யானை
கருதரு — எண்ண முடியாத
கரு = கருப்பம்
கந்துகம் = பந்து, குதிரை
கம்பித்து = நடுங்கி
கனகம் = பொன்
கன்னல் = கரும்பு
கலினமா = குதிரை
கலை = கலைகள், மான்
கறங்க = ஒலிக்க
கல்விடைப்படுத்தல் = கல்லில் பெயரும் பீடும் எழுதி நிறுவுதல்
கயவாய் = பெருமையினையுடையவாய்
கவந்தம் = தலையற்ற உடல்
கற்றை = தொகுதி
கவரி = சாமரை

கவின்	=	அழகு
கார்	=	மேகம்
கார் முகம்	=	வில்
கிரி	=	மலை
கிளர்பட	=	விளங்க
குலாலன்	=	குயவன்
குனிசிலை	=	வளைந்தவில்
குருளை	=	குட்டி
குழையும்	=	குழைகின்ற
குருதி	=	இரத்தம்
கேடயம்	=	பரிசை
கொம்பு	=	வேகம்
கொம்பு	=	கிளை
கோன்முறை	=	செங்கோல் முறை
கைதவம்	=	வஞ்சம்

ச

சயந்தன்	=	இந்திரன் மகன், பாகசாதனி
சிந்துரத்திலகம்	=	சிந்துரப்பொட்டு
சிம்புள்	=	சிங்கத்தையும்கொல்லவல்ல எட்டுக்காற் பறவை
சிட்டர்	=	மேலோர்
சீலம்	=	ஒழுக்கம்
சீர்த்தி	=	மிகுபுகழ்
சென்னி	=	தலை
செக்கர்	=	செவ்வானம்
சேய்	=	மகன், முருகன்
சொல்நயம்	=	சொற்பொலிவு
சோமன்	=	சந்திரன்

ஞா

ஞாயிறு	=	சூரியன்

த

தவர்	=	தவசிகள்
தண்டை	=	ஒரு கால் அணி
தரியலர்	=	பகைவர்
தவளம்	=	வெண்மை
தஞ்சம்	=	அடைக்கலம், எண்மை
தரணி	=	பூமி
தண்டலை	=	சோலை
தவா	=	நீங்காத
தவிசு	—	இருக்கை
தருக	=	கொண்டுவா
தந்தி	=	யானை
தடிந்து	=	வெட்டி
தார்	=	மாலை
தாரம்	=	மனைவி
தாழி	=	மிடா
திகிரி	=	சக்கிரம்
தினைப்புனம்	=	தினைவிளைபுலம்
திருமுகம்	=	ஓலை
திருத்தி	=	திருப்தி, மன அமைதி
தினவு	=	அரிப்பு
துலங்க	=	விளங்க
துங்கம்	=	உயர்வு
துகள்	=	குற்றம்
துன்றும்	=	நெருங்கும்
துணையடி	=	இணையடி
தெருண்ட	=	அறிந்த
தேசுறு	=	ஒளி பொருந்திய
தொன்முது கடவுள்	=	பழம் பெருங் கடவுள்
தொண்டர்	=	பத்தர்
தொடைநயம்	=	தொடுப்பின் நயம்
தோம்	=	குற்றம்
தைவரும்	=	தடவும்

ந

நடைநயம்	=	நடை நன்மை
நண்ணலன்	=	பகைவன்
நயப்பு	=	விருப்பம்
நவில	=	சொல்ல
நவின்ற	=	சொன்ன
நமன்	=	யமன்

ப

பரிமா	=	குதிரை
பட்டிமண்டபம்	=	கலைபயில் மண்டபம்
பழனம்	=	வயல்
பழுது	=	குற்றம்
பராவி	=	துதித்து
பரவை	=	கடல்
பரி	=	குதிரை
பரித்தது	=	தாங்கியது
பற்றலர்	=	பகைவர்
பரிதி	=	சூரியன்
பன்னி	=	மனைவி
படி	=	பூமி
பன்னி	=	பலதரஞ் சொல்லி
பாவலர்	=	பாடல் வல்ல புலவர்
பிணைமான்	=	பெண்மான்
பிறங்கும்	=	விளங்கும்
பிளிற	=	ஒலிக்க, (யானையின் பிளிற்றொலி)
புரசை	=	யானையின் கழுத்துக் கயிறு
புணரி	=	கடல்
பூமகள்	=	இலக்குமி

பெற்றி	=	தன்மை
பொலிதரு	=	விளங்குகின்ற
பொரியல்	=	பொரிக்கப்பட்ட உணவு
பொருள்நயம்	=	பொருள் நன்மை
பொற்பு	=	அழகு
போந்தனர்	=	வந்தனர்

ம

மட்கலம்	=	மண்ணாற் செய்தவை
மண்டலம்	=	வட்டம்
மகிதலம்	=	பூமி
மகபதி	=	இந்திரன்
மவுலி	=	கிரீடம்
மன்னுயிர்	=	பிறவுயிர்
மத்தகம்	=	தலை
மாகதர்	=	மகத நாட்டார், அரசர் திரு முன் இருந்து அவர் தம் புகழ் பாடுவோர்
மாழ்கினர்	=	வருந்தினர்
மாண்ட	=	மாட்சிமைப்பட்ட
முடுகும்	=	வேகமாய்ச் சுழலும்
முரண்	=	மாறுபாடு
முகுந்தன்	=	வீட்டையும், தரணியையும் தரவல்ல கடவுள்
முழவு	=	மத்தளம், முரசு
மொழி விளக்கு	=	மொழியாகிய விளக்கு

வ

வலந்தரல்	=	வெற்றிதரல்
வயங்கு	=	விளங்குகின்ற
வன்மை	=	பலம்
வண்புனல்	=	வளநீர்
வந்தியர்	=	மங்கல பாடகர்
வந்தித்து	=	வணங்கி

வரால் = ஒருவகை மீன்
வறுவல் = வறுக்கப்பெற்றது, வறை
வழுவி = தவறி
வயம் = பலம், வலி
வறிஞன் = ஏழை
வயப்படை = வலிமிக்க படை
வங்கம் = கப்பல்
வயவர் = வீரர்
வன்னி = நெருப்பு
வாதகதி = காற்றுப்போன்ற செலவு
வான் = உயர்ந்த
வாளை = வாளைமீன்
வாதுமைப்பால் = வாதுமைப் பருப்பின் அரைத்ததனோடளவிய பால்
வாவுதல் = தாவுதல்
வாளி = அம்பு
விண்டலம் = வானிடம்
விரசிட = கலந்திட, விரைவாக
வியன்கொடி = உயர் கொடி
விமரிசை = சிறப்பு
விரிஞ்சன் = நான்முகன்
விஞ்சை = வித்தை
விஞ்சிய = அதிகமான
விண்டது = பேசியது
வியன் = அகன்ற, உயர்ந்த
விரவிய = கலந்த
விரசம் = சுவையற்றது
வெள்ளம் = ஒரு பேரெண்
வெரூஉக்கொள = அஞ்ச
வேழம் = யானை
வேலை = கடல்
வைபவம் = விழாச்சிறப்பு